
# பெண்ணின் குரல்

டிசம்பர் 2001 ❑ இதழ் 24 ❑ ISSN 1391-0914 ❑ விலை ரூபா 20/=

**பெண்களின் உரிமைக்கான இலங்கைச் சஞ்சிகை**



## சிறுவர் உரிமைகள்

## பொருளடக்கம்


* பாலியல் சுரண்டலும், சிறுவர் உரிமைகளும் 2
* சிறுவர் சுகாதாரம் 5
* அனோமா 9
* ஏழைச் சிறார்களுக்கு உரிமைகள் உள்ளனவா? 12
* முஸ்லிம் பெண்களுக்கு ஆகக் குறைந்த திருமண வயது 14
* சிறுவர் இலக்கியம் 17
* ஐ.நா. சமவாயம் சிறுவர் உரிமைகள் 20



**ஆசிரியர் :**
பத்மா சோமகாந்தன்

**முகப்புச் சித்திரமும், சித்திரங்களும் :**
ஜானகி சமந்தி

**அச்சுப் பதிவு :**
ஹைடெக் பிரிண்ட்ஸ்

**ஆதரவளிப்பு :** SIDA

டிசம்பர், 2001
இதழ் 24

ISSN 1391-0914

**வெளியீடு :**
பெண்ணின் குரல்
21/25 பொல்ஹேன்கொட கார்டின்ஸ்
கொழும்பு - 05
தொலைபேசி : 074 - 407879/816585
ஈ-மெயில்: voicewom@sltnet.lk



கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்




## சிறுவர் உரிமைகள்

வேகமாகச் செயற்படுவதும், தொழிற்படுவதும், நிருவகிக்கப்படுவதுமான வயதுவந்தோர் உலகில் சிறுவர்கள் தங்கி வாழ்பவர்களாக விளங்குகின்றார்கள். வயதுவந்தோர் உலகில் சில வேளைகளில் இடம்பெறுவது போன்று, வாழ்வுக்கான உரிமை அவர்களுக்கு மறுக்கப்படக்கூடும். அவர்களாக அடிமைத் தொழிலுக்காக, விபச்சாரத்திற்காக விற்கப்பட முடியும். நாகரீகமான வயதுவந்தோர் உலகமானது தமது சிறுவர்களையும், அவசியப்படும் போது வேறு சிறுவர்களையும் பாதுகாத்து, உணவூட்டி, கவனிக்கின்றது. கைவிடப்பட்ட வீதியோரச் சிறுவர்களுக்காக சில சிறுவர் இல்லங்களையும், வசதிகளையும் நாம் கொண்டுள்ளோம். இருந்த போதிலும், வயதுவந்தோர் உலகில், சிறுவர்கள் ஏமாற்றப்படுகின்றார்கள். சட்ட அமைப்பானது அதன் முன்பாக வழக்குகள் கொண்டு வரும்பட்சத்தில் அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கின்றது. அதன் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், சட்டபூர்வ பாதுகாப்பைக் கோருவதற்கும் சிறுவரினால் எதுவும் செய்ய முடியாதுள்ளது.

பல வருடங்களுக்கு முன் எமது தங்கி வாழும் சிறுவரின் துன்பகரமான நிலையையிட்டு ஐக்கிய நாடுகள் தனது கண்களைத் திறந்தது. இருந்தும், சிறுவர் தம்மைப் பாதுகாப்பதற்கான இயலாமையையும், வழமையான வாழ்க்கையை வாழ்வதற்கான உரிமையையும் நடைமுறையிலுள்ள வர்த்தகரீதியான வயதுவந்தோர் உலகம் சுரண்டுகின்றது.

தமது தொழில்துறையில் அனுபவம்வாய்ந்ததும், அறிவுத் திறமையானதுமான பெண்களினால் செய்யப்பட்ட பங்களிப்புக்களில் சிறுவர் உரிமைகள் மறுக்கப்பட்டதன் சில அம்சங்களை சிறுவர் உரிமைகள் பற்றிய இந்த இதழ் பரிசீலிக்கின்றது. சிறுவராக வாழ்க்கையை ஆரம்பித்தபோது ஒவ்வொரு வயதுவந்தவர்களும் தமது உடல்ரீதியான தேவைகளையும், சௌகரியங்களையும் திருப்தியபடுத்துவதற்கு சந்தர்ப்பங்களை நோக்கியதை வயதுவந்தோர் உலகம் மிகவும் விரைவிலேயே மறந்து விடுகின்றது.

**- ஆசிரியர்**


00144

# பாலியல் சுரண்டலும், சிறுவர் உரிமைகளும்

மெரீன் செனிவிரத்ன



சிறுவர்களில் உரித்தாக்கப்பட்டுள்ள உரிமைகளை உறுதிப்படுத்தும் ஒன்றிணைந்த சர்வதேச உடன்படிக்கை யொன்றை அமுல்படுத்தப்படுவதற்காக சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயம் 1989இல் இடம்பெற்ற போது, மனித உரிமைகளின் துறையில் புதுமையான தொரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குடிசார் சமூகத்தில் சிறுவர்களின் வாழ்தகவு, முன்னேற்றம், பாதுகாப்பு, மற்றும் பங்கெடுப்பு ஆகிய பிரச்சினைகளைக் கவனத்திற்கு எடுப்பதற்கான கடமையை அரசாங்கங்கள்- கைச்சாத்திட்டோர் மீது சுமத்தும் இக் குறிப்பிடத்தக்க மனித ஆவணமானது 1990இல் நியூயோர்க்கில் நடைபெற்ற உலக உச்சிமகாநாட்டில் அதன் பெரும் எண்ணிக்கை யிலான உலகத் தலைவர்கள் கூடிய போது, கொண்டுவரப்பட்டு, சிறுவர்களின் வாழ்தகவு, பாதுகாப்பு, மற்றும் முன்னேற்றம் ஆகியன மீதான உலக உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், அதை அமுல்படுத்துவதற்கான செயற்திட்டமும் உடன்படப் பட்டது. உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு, ஏற்றுக் கொண்டுள்ளதால் அரசாங்கம்- கைச்சாத்திட்டோர் களுக்கு செயற்திட்டம் பிணைப்பிலானதாகும். இலங்கை 1991 ஜூலையில் சமவாயத்தை நிலைப்படுத்தி, ஏற்றுக் கொண்டது.

சமவாயம் 54 உறுப்புரைகளை அடக்குகின்றது. உறுதியான உரிமைகளை 40 உறுப்புரைகள் கையாளுகின்றன. அதே வேளை ஏனையவை உறுதியான உரிமைகளைக் கண்காணிப்பதை வசதிப்படுத்துவதற்காக, பிரதானமாக நடைமுறை விடயங்களில் கரிசனையைக் கொண்டுள்ளன. சிறுவர்களுக்கு பாகுபாடின்றி உத்தரவாதமளிப்பதற்கு அரசாங்க்ங்கள் மேற்கொள்ளும் ஆகக் குறைந்த உரிமைகளே இவையாகும். சகல காரணங்களுக்கும், சிறுவரின் "சிறந்த ஆர்வங்கள்" ஆரம்பநிலை கரிசனையாக அங்கீகரிக்கப்படுகின்றன.

வாழ்க்கைக்கான உரிமை பற்றியவாறானவை யாக இத்தகைய ஏற்பாடுகளினால் உதாரணம் காட்டப்பட்டவாறு குடிசார், அரசியல், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள், சித்திரவதை, மற்றும் கருத்து, மதச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு எதிரான தடை, தேசியத்தைப் பெறுவதற்கான உரிமை, கல்விக்கான உரிமை, சுகாதாரத்திற்கான உரிமை, சமூக பாதுகாப்புக்கான உரிமை ஆகியவற்றை உரிமைகள் உள்ளடக்குகின்றன. துஷ்பிரயோகிக்கப்பட்ட, சுரண்டப்பட்ட, உதாசீனம் செய்யப்பட்டவர்கள் உட்பட சிறுவர்களின் விசேட குழுக்களின் கரிசனைகளை சமவாயம் முனைப்படுத்துவது குறிப்பிடத்தக்கதாகும். கஷ்டங்களின் போது இச் சிறுவர்களின் நிலையைக் கையாள்வதற்கு,

அதாவது அவர்களுக்கு மேலும் பாதுகாப்பளிப்பதற்கு குறிப்பிடத்தக்க அறைகூவல் ஒன்று உள்ளது. பாலியல்ரீதியில் சுரண்டப்பட்ட சிறுவர்கள், சிறுவர் வேலையாட்கள், வலது குறைந்த சிறுவர்கள், அகதிச் சிறுவர்கள், அனாதைகள், சிறுபான்மை, மற்றும் சுதேசிய சிறுவர்கள், பாதுகாவலில் உள்ள சிறுவர்கள், சிறுவர் யுத்தவீரர்கள் ஆகியோரை இக்குழுக்கள் அடக்குகின்றன.

பாலியல் சுரண்டல் மீது மேலும் திட்டமான வையான சமவாயத்தின் பின்வரும் உறுப்புரைகள் மிகவும் பொருத்தமானவையாகும்.

## உறுப்புரை 19

பெற்றோர், சட்டப்படியான பாதுகாவலர், அல்லது பராமரிக்கும் வேறெவரின் கண்காணிப்பில் உள்ள சிறுவர் வளரும் பருவத்தில், பாலியல் சார்ந்த இம்சை அடங்கலான உடலை, அல்லது உள்ளத்தைப் பாதிக்கக்கூடிய வன்செயல், காயம், அல்லது இம்சை, புறக்கணிப்பு, அல்லது பாராமுகமான பராமரிப்பு, கொடுமை, அல்லது சுரண்டிப் பிழைத்தல் போன்ற சகல வகையான தீங்குகளிலிருந்தும் அதனைக் காப்பாற்றுதற்குரிய சட்ட, நிர்வாக, சமூக, போதனா நடவடிக்கைகள் அனைத்தையும் அரசதரப்பினர் மேற்கொள்ள வேண்டும்.

## உறுப்புரை 34

பாலியல் சார்ந்த சகல வகையான சுரண்டல் களிலிருந்தும், துர்ப்பிரயோகத்திலிருந்தும் சிறுவரைப் பாதுகாப்பதற்கு அரசதரப்பினர் பொறுப்பேற்க வேண்டும். இதனை நோக்கமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தடுப்பதற்கென சகல தேசிய, இருதரப்பு மற்றும் பலதரப்பு நடவடிக்கைகளையும் அரசதரப்பினர் குறிப்பாக மேற்கொள்ள வேண்டும்.

(அ) எந்த வகையான சட்ட விரோதப் பாலியல் நடவடிக்கையிலும் ஈடுபடச் செய்யும் பொருட்டுப் சிறுவரைத் தூண்டுதல், அல்லது வற்புறுத்துதல்.

(ஆ) விபசாரம், அல்லது ஏனைய சட்டவிரோதப் பாலியல் நடவடிக்கைகளுக்குப் சிறுவர்களைப் பயன்படுத்திச் சுரண்டிப் பிழைத்தல்.

(இ) ஆபாசக் கேளிக்கைகளிலும், ஊடகச் சாதனங் களிலும் சிறுவர்களைப் பாலியல்ரீதியாகப் பயன்படுத்திச் சுரண்டிப் பிழைத்தல.

## உறுப்புரை 35

எந்த நோக்கத்துக்கேனும், அல்லது எந்த வகையிலேனும் சிறுவர்களைக் கடத்திச் செல்லுதல், விற்றல் அல்லது பரிமாற்றம் செய்தலைத் தடுக்கும் பொருட்டு, அரசதரப்பினர், தகுந்த தேசிய, இருதரப்பு, பலதரப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

சிறுவர்களின் பாலியல் சுரண்டல் மறுப்புக்கிடமின்றி மனித உரிமைகளின் மீறலாகும். இப்பிரச்சினை அபிவிருத்தியடையும், மற்றும் அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் பாதிக்கின்றன. ஆனால், பிரச்சினையின் அளவு வேறுபடுகின்றது. இது பெரிதும் ஓரளவே கண்கூடானதாகும். எனவே, எமக்கு மத்தியில் அதன் குற்றவியல் பிரசன்னத்தை சிலர் மறுக்கின்றனர். இது பாதாள உலகின் ஓர் "உற்பத்தி" என்பதுடன், அச்சம், பயம் என்ற போர்வையினால் மூடி மறைக்கப்பட்டுமுள்ளது.

பாதுகாப்பு, அடக்குமுறை ஆகிய துறைகளில் பணியாற்றும் யாராவது ஒருவர் இந்த துன்புறுத்தலைத் தணிப்பதற்கும், முடிவுறுத்துவதற்குமான முயற்சிகளின் போது, நவீன அடிமைத்தனத்தின் விரும்பத்தகாத அமைப்பாக விளங்கும் சிறுவர்களின் பாலியல் சுரண்டல் பற்றிய கசப்பான உண்மைகளை அறிந்து வைத்திருப் பதுடன், கடுமையான அபாயத்திற்கும் முகங்கொடுக் கின்றார். இலங்கையிலும், உலகளாவியரீதியிலும் உள்ள அதிக எண்ணிக்கையிலான சிறுவர்கள் இப்பாலியல் அடிமைத்தனத்தின் வலையில் சிக்குண்டு, ஈவிரக்கமின்றி பயன்படுத்தப்பட்டு, துஷ்பிரயோகிக்கப்பட்டு, இறுதியில் ஒதுக்கி வைக்கப்படுகின்றார்கள். அவர்கள் சிக்கியுள்ள விஷமத்தனமான சுற்றானது, தாம் நவீனமானவர்கள், ஆனாலும் முன்னைய காலத்தின் மோசமான அடிச் சுவடுகளை நிலை நிறுத்துபவர்கள் என நினைக்கும் சிலரால் தவறான வழியில் பயமுறுத்திக் கேட்கப் படுவதனால், அதிகரிக்கின்றது.

பிரசித்தமான நம்பிக்கைக்கு மாறான, பாரிய காரணியாக வறுமை விளங்கவில்லை. மிக ஏழ்மையான சமுதாயங்களின் மத்தியில் கூட அவர்களின் சுரண்டலுக்கு வறுமை இட்டுச் செல்லவில்லை. இங்கே கிராக்கியானது முக்கியமான பங்கினை வகிப்பதுடன், மாபியாக்காரர்களும், குற்றவாளிகளும் மிகவும் ஏழைகளின் மத்தியில் பலிகடாக்களைக் கண்டுபிடிக்கின்றனர். சிறுவர்களுக்கு கல்வி வசதிகள் இன்மை, ஒழுக்கமற்ற இல்லங்கள், இடம் பெயர்ந்த குடும்பங்கள், குடிசார் யுத்தம், சமூகசீர்குலைவு, பண்டைகாலத்தின் குடும்ப ஆதரவு அமைப்பின்மை, இயற்பொருள்வாதம், தேவையற்ற பாவனைப் பழக்கம், ஆன்மீகப் பெறுமதிகள் இன்மை ஆகிய சகலவுமே காரணிகள் ஆகும். இது தொடர்பில் சிறுவர் ஒருவரின் உரிமைகள் பொருள் ஒன்றாக, உற்பத்தியின் காரணியாக, வயது வந்தோருக்கான பொருளாதார, மற்றும் மூலதனமாக நோக்கப்படுவதன் காரணத்தினால் எளிதில் மீறப்படுகின்றன. பெண்களின் வருடக்கணக்கிலான பாகுபாடானது பெண் பிள்ளைகளின் சுரண்டலுக்கு பங்களிக்கின்றது. அவர்களுக்கு குறைந்தளவு சந்தர்ப் பங்களே வழங்கப்படுவதுடன், அவர்கள் விபச்சாரத்திற் குள்ளும் தள்ளப்படுகின்றனர்.

சிறுவர்களைக் கடத்தும் குற்றவாளிகளைக் கொண்ட கும்பலொன்றின் தரகரினால் **நிலூகா** கொண்டு வரப்பட்ட போது அவளுக்கு பதினொரு வயது மட்டுமே. அவள் கண்டியைச் சேர்ந்த பின்தங்கிய கிராமமொன்றில் இருந்து ஹிக்கடுவைக்கு கொண்டுவரப்பட்டாள்.

ஆரம்பத்தில் இருந்தே, தெற்குப் பகுதியில் உள்ள கடற்கரையோரத்தின் குறிப்பிட்டதொரு "பாதுகாப்பான இஸ்லத்திற்கு" வருகைதரும் ஜேர்மன் பாலியல் உல்லாசப் பயணிகளின் கிராக்கியைப் பூர்த்தி செய்வதற்கு "பாலியல் ஊழியராக" அவள் பயன்படுத்தப்பட்டாள். இக்கும்பலின் பெண் உறுப்பினர் ஒருவரின் வீட்டில் நிலூகா தங்க விடப்பட்டாள். அவளுக்கு கொடுப்பனவாக அன்பளிப்புகள், சாப்பாடு, பற்றாக்குறையான ஆடைகள், இரவு வேளையில் அற்பமான உறைவிடம் ஆகியன வழங்கப்பட்டன. இவ் "வியாபாரத்தில்" அவள் இரு வருடங்கள் நீடித்திருப்பாள். சிறுவர் இயக்கத்தினர் இது பற்றி பொலிசாரிடம் முறையிட்டனர். "எவ்வித சாட்சியம்" இல்லாத காரணத்தினால், குற்றம்புரிந்தோருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இது போன்ற மூடி மறைக்கப்பட்ட வியாபாரத்தின் சாட்சியத்தை முன்னிறுத்த முடியாது.

எனினும், இச்சிறுமி மரணமடைந்து, மூன்று வருடங்களின் பின்னரே கோஷ்டித் தலைவர்களில் ஒருவன் கைது செய்யப்பட்டான். பாலியல் நடவடிக்கைக்காக 13 வயதான பையன் ஒருவனைக் கடத்தியதாக அவன் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இலங்கையில், தன்னினச்சேர்க்கையில் மோகம் கொண்ட உள்ளூர், மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களினால் பையன்களுக்கான கிராக்கி அதிகரித்துள்ளது. பையன்கள் "பாதுகாப்பானவர்கள்" என்பதுடன், எச்ஐவி/எயிட்ஸ் வைரசினால் பாதிக்கப்படுவதுமில்லை.

**நுவான்** 14 வயதானவன். அவன் தென் கரையோரத்தில் மீன்பிடிக் கிராமமொன்றில் வாழ்ந்தான். அவன் அழகானவன். மண்ணிற மயிருடன் சிவந்த நிறமானவன். ஒரு ஜேர்மன் தன்னினச்சேர்க்கையாளன் நுவான் மீது கவரப்பட்டு, அவனை முழுமையாகத் துஷ்பிரயோகம் செய்தான். அயலவர்களால் செய்யப்பட்ட பெருமளவு முறைப்பாடுகளைத் தொடர்ந்து ஜேர்மன்காரன் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டான். காலக்கிரமத்தில் ஜேர்மன்காரனுக்குரிய தண்டனை வழங்கப்பட்டது. ஆனால், தான் இழைத்த குற்றத்திற்காகவும், இதன் காரணமாக சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றத்திற்கு வருகை தந்ததினாலும் நுவானின் வாழ்க்கை சீர்குலைந்தது. அத்துடன் அவனைத் திரும்ப வீட்டுக்கு அனுமதிக்க அவனது சித்தி மறுப்புத் தெரிவித்துவிட்டாள். சிறுவர் இயக்கத்தினர் நடத்திய தீவிர தேடுதலின் பின்னர், நுவான் அக்கிராமத்தில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டு, தெற்குப் பகுதியில் உள்ள பின்தங்கிய கிராமமொன்றில் உள்ள அவனது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டான்.

ஐ.நா. முகவராண்மைகளின் சமவாயத்தில் சிறுவர் சாசனம் கைச்சாத்திடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது முதல் பெருமளவு சிறுவர் மையத்திலான அரச சார்பற்ற தாபனங்களும், அரசாங்கமும் சிறுவர்கள் பாலியல்ரீதியில் சுரண்டப்படுவதையும், அவர்கள் கடத்தப்படுவதையும், மற்றும் ஆபாச இலக்கியங்களையும் தடை செய்வதற்கான வழிவகைகள் உட்பட பெருமளவு துறைகளில் சிறுவரின் உரிமைகளை அமுலாக்குவதற்கு பங்களித்துள்ளன. இவற்றில் மிகவும் முக்கியமானதொன்றாக, 1995 அக்டோபரில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட குற்றவியல் சட்டக் கோவைக்கான திருத்தங்கள் விளங்குகின்றன. முறைப்பாடுகளைப் பதிவதற்காகவும், விசாரணைகளை நடத்துவதற்காகவும், வழக்குகளில் வெற்றியீட்டுவதற்காகவும் கொழும்பில் பொலிஸ் பெண்கள், சிறுவர் பணியகமும் (தொலைபேசி 444444), நாடுபூராவும் பெருமளவு பொலிஸ் நிலையங்களில் விசேட கரும பீடங்களும் தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, துஷ்பிரயோகத்தில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் அதிகரித்தன. இதேபோன்ற கரும பீடமொன்று, அட்டோர்னி ஜெனரல் திணைக்களத்திலும் தாபிக்கப்பட்டுள்ளது. சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் மேல் நீதிமன்றங்களில் விசாரணைக்காக எடுக்கப்படுகின்றன. நீதிவான் நீதிமன்றங்களில் பூர்வாங்க விசாரணைகள் நடத்தப்படுவது இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தாமதங்கள் குறைந்து, அதிக சிறுவர் நட்புறவுடனான போக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சமவாயமானது மனிதர்களின் மனோநிலையை மாற்றியமைத்துள்ளது. சிறுவர்களின் உரிமைகளின் சகல அம்சங்கள் மீதான கவனத்தை அது தொடக்கி வைத்துள்ளது. இவ்வுரிமைகள் தமது நாட்டிலும் சரி, உலகத்திலும் சரி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அவை பாதுகாக்கப்படவும் வேண்டும். அத்துடன் அவர்களது சமூக - கலாசார வாழ்வில் பங்கெடுப்பதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பமும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். சகலருக்கும் "மனித உரிமைகள்" உலகளாவியரீதியில் முனைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், மனித உரிமைகள் முழுமையாக மீறப்படும் ஒரு காலகட்டத்தில், 'இன்டர்நெற்' ஆபாச இலக்கியங்கள், 'இன்டர்நெற்' ஊடாக சிறுவர் கடத்தல் போன்ற புதியதும், பயங்கரமானதுமான பிசாசுகளுக்கு சிறுவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. சிறுவர்களின் சேமநலனுக்கு இலத்திரனியல் ஊடகமும் ஒரு வஞ்சனையான பயமுறுத்தலாகும் என்பதுடன், அவர்களுக்கான ஆரோக்கியமான சூழலும் முற்றுகையின் கீழேயே உள்ளது. ஆனால், சந்ததிகளுக்கு அவர்களது பெற்றோரே பொறுப்பு என்பது மட்டும் அல்லாமல் ஆனால், சகல சிறுவர்களின் ஏற்பாடு, பாதுகாப்பு, முன்னேற்றம் ஆகியவற்றை மிகவும் தனிப்பட்டதும், ஒளிவுமறைவற்றதுமான வழியில் மேற்கொள்வதற்கு சகல சம்பந்தப்பட்ட அரச தரப்பினரை ஊக்கியாக்குவதற்கு நவீன வரலாற்றில் ஒரு பாரிய முன்னேற்ற நடவடிக்கையாக சமவாயம் விளங்குகின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

# சிறுவர் சுகாதாரம்

மெலிந்த ஷா

இலங்கை 99% நோய்பாதிக்கப்படாமை வீதத்தையும், 90% படிப்பறிவு வீதத்தையும் கொண்டுள்ளது. எமது சிசு மரணம் பெரிதும் வழக்கில் இல்லை. குறைந்த பிறப்பு நிறைகளுடனான குழந்தைகளின் வீதம் தென் ஆசியாவிலேயே சிறந்ததொன்றாகும். உண்மையில், புள்ளிவிபரங்களின்படி, தென் ஆசியாவிலேயே எமது சிறுவர்கள் தான் ஆரோக்கியமானவர்களாக விளங்க வேண்டும். எமது சிறுவர்களின் உண்மையான சுகாதார நிலையையும், அவர்கள் வாழும் நிலைகளையும் நாம் அபூர்வமாக கேட்டறிகின்றோம். இலங்கையில் மூன்று சிறுவர்களில் ஒருவர் குறைந்த நிறையுடையவராவர்; 2 மில்லியன் பேர் குள்ளமான வளர்ச்சியைக் கொண்டவர்களாவர். இலங்கைச் சிறுவர்களில் சுமார் 57%இனர் பாதுகாப்பான குடிநீரைக் கொண்டிருப்பதுடன், 20%இனர் போதியளவு ஆரோக்கியத்தை கொண்டிருக்கவில்லை. இது பற்றித்தான் நாங்கள் கேள்விப்படுவதேயில்லை.

•

சுகாதாரம், நீர் விநியோகம் ஆகியன காரணமாகவே சிறுவர் மத்தியில் பெரிதும் நோய் பரவுகின்றது. சூழல் சுகாதாரமும், தனிப்பட்ட ஆரோக்கியமும் போதியளவு பேணப்பட வேண்டும். சன நெருக்கடியிலான இடப்பரப்பில் வாழும் குடும்பங்கள் நோயின் தொற்றுதலுக்கு உட்பட வேண்டிய நிலை அதிகளாகவே விளங்குகின்றது. குளிர், பனி, காற்றோட்டமற்ற வீடமைப்பு ஆகியன மூச்செடுக்கும் நோய், விசேடமாக குழந்தைகளில் அபரிதமாகக் காணப்படுகின்றது என்ற கருத்தினை வெளிப்படுத்துகின்றன. இவ்வாறான குழந்தைகளுக்கு அவர்களது குடும்பங்களில் இருந்து தொடர்ச்சியான பராமரிப்பும், ஆதரவும் அவசியமாகின்றது. நகர, கிராமிய சேரிப்புறங்களும், இடம்பெயர்ந்த சமுதாயங்களும் இவ் வகுதியில் மில்லியன்கணக்கான மக்களை அடக்குகின்றது.

பாரிய சுகாதாரப் பிரச்சினையாக மலேரியா தொடர்ந்தும் விளங்குகின்றது. இது பெருமளவு இளம் உயிர்களைப் பலியெடுக்கின்றது. இதே வேளை, வயதுவந்தவர்களுக்கான சீரியதொரு பிரச்சினையாக மலேரியா விளங்குகின்றது. ஆனால், சிறுவர்களே இந்நோயின் தாக்கங்களுக்கு அதிகளவு ஊறுபடத்தக்க நிலையில் விளங்குகிறார்கள். நீர் விநியோகங்களையும், சுகாதாரமற்ற குப்பை நிரப்புமிடங்களையும், மலசல கூடங்களையும் சுற்றி உள்ள நுளம்புகளின் அதிகரிப்பின் காரணமாக, மலேரியா அதிகரிப்பதற்கான சந்தர்ப்பம் அதிகரித்துள்ளது. முழு தென் ஆசியப் பிராந்தியத்திலும் மோசமான சுகாதாரப் பிரச்சினைகளில் ஒன்றுக்கு, அதாவது வயிற்றோட்ட நோய்க்கு இந்நிலைமைகள் பங்களிக்கின்றன. இது மோசமான சுகாதார நிலைமைகளின் விளைவினால் அன்றி, ஆனால், பாதுகாப்பற்ற குடிநீரின் விளைவிலானதாகும். 1992இல் சிறுவர் மீதான கொழும்புத் தீர்மானமானது 1996க்குள் தென் ஆசிய சிறுவர்களின் 3/4க்கும் குறையாதவர்களுக்கு பாதுகாப்பான குடி நீருக்கான அடைதலையும், 2000க்குள் உலகளாவியரீதியிலான அடைதலையும், வழங்குவதற்கான அதன் கடப்பாட்டினை மீள் உறுதிப்படுத்தியது. 1998இல் 5.6%இனரே இந்த அடிப்படை உரிமையைக் கொண்டிருந்தனர்.



சிசு இறப்பின் பிரதான காரணியாக மூச்செடுப்பு தொற்றுதலுடன் இணைந்து வயிற்றோட்ட நோய் விளங்குகின்றது. நோயின் நிகழ்வு (குறிப்பாக மலேரியா) வடக்கிலும், கிழக்கிலும் உயர் வானதாகும். நோய், இடப்பெயர்வு, ஒழுங்கீனமான உணவு விநியோகங்கள் ஆகியன இணைந்து நீண்ட கால, அல்லது நிரந்தரமான சுகாதாரப் பிரச்சினை களுக்கு இட்டுச்செல்கின்றன.

சுகாதாரத்தையும், தனிப்பட்ட ஆரோக்கியத் தையும் மேம்படுத்துவதன் மூலம் பரசைட்டுக் களையும், கிருமிகளினாலான நோயையும் கட்டுப்படுத்துவதற்கான அவசியம் தெளிவாகியுள்ளது. போதனை, விழிப்பியல் ஆகியவற்றில் முக்கிய பங்கினை உள்ளூர் சுகாதார ஊழியர்கள் கொண்டிருப்பதுடன், இது பற்றி பாடசாலை அமைப்பு ஊடாக சிறுவர்களுக்கு போதிக்கப்படலாம். ஆனால், பாதுகாப்பான நீருக்கும், மலசலகூடங்களுக்குமான அடைதலை வழங்குவதில் அரசாங்கத்தின் சம்பந்தம் உதாசீனம் செய்யப்படக்கூடாது. சுத்தப்படுத்துவதில் சமுதாயப் பங்கெடுப்புக்கான பாரிய அவசியம் ஒன்றுள்ளது.

●

இலங்கைச் சிறுவர்களில் குறிப்பாக வறுமையின் காரணமாக, போஷாக்கின்மை ஒரு பரவலான பிரச்சினையாக விளங்குகின்றது. 5 வயதுக்கு குறைந்த 18%இனர் போஷாக்கற்றவர் களாக விளங்கும் அதே வேளை, மேலும் பலர் குறைந்த எடையுடன் விளங்குகின்றனர். வடக்கிலும், கிழக்கிலும் இருந்து தரவு உள்ளடக்கப்பட்டால், 18% என்ற எண்ணிக்கை மிகவும் உயர்வாக விளங்கும். தமது முழு ஆற்றலளவுக்கு வளர்வதற்கு அவர்களை அனுமதிக்கும் அவசியமானதும், சரியான அளவிலா னதுமான போஷாக்குகளை போஷாக்கற்ற சிறுவர்கள் பெறுவதில்லை. சிறுவர்கள் மத்தியிலான போஷாக்கின்மை மூளைச் சிதைவுக்கு, அல்லது மனோநிலை அபிவிருத்தி இன்மைக்கு இட்டுச் செல்லலாம். இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற வேறு தென் ஆசிய நாடுகளைப் போலன்றி, இலங்கையானது உணவைப் பொறுத்தளவில் பெண் பிள்ளைகளுக்கு எதிராகப் பாகுபாடு காட்டுவதில்லை. ஆனால், சகல சிறுவர்களுமே சமமான அளவில் போஷாக்கின்மையுடன் விளங்குகிறார்கள். சிறுவர் மத்தியில் புரதம், அயடீன், விட்டமின் A, மற்றும் D ஆகியவற்றில் சீரிய குறைவுபாடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

தென் ஆசியாவில் மிகவும் அவசரமான சவால்களில் ஒன்றாக போஷாக்கை 1992இல் கொழும்புத் தீர்மானமானது நிரல்படுத்தியுள்ளது. இது மிதவாதமானதும், பாரதூரமானதுமான போஷாக் கின்மையை அரைவாசியாகக் குறைப்பதற்கான நோக்கினைக் கொண்டிருந்தது. இதே காலகட்டத்தில், சிறுவர்களின் உணவு முறைகளை நோக்குவதற்காக இலங்கையில் ஆறு வேறுபட்ட அமைவிடங்களில் ஆய்வொன்று நடத்தப்பட்டது. பொதுவாக சிறுவர்கள் நாளொன்றுக்கு 2 - 3 உணவுகளைச் சாப்பிடுகிறார்கள் என்றும், இது பெரிதும் சோற்றையும், மிகவும் சிறிதளவு மரக்கறிகளையும் அடக்கியுள்ளது என்றும் கண்டறியப் பட்டுள்ளது. போதியளவு போஷாக்குக்கு அவசியமான சகல பாரிய வகைகளில் இருந்தும் உணவு அடக்கப்பட வில்லை. கிராமிய, மற்றும் பெருந்தோட்டத் துறைகளின் மத்தியில் போஷாக்கின்மை மிகவும் உயர்வாக விளங்கியதாக ஆய்வு கண்டறிந்துள்ளது.

ஆரோக்கியமான தனிப்பட்டவர்களாக வளர் வதற்கு சிறுவர்களுக்கு புரதத் தேவைகள் மிகவும் முக்கியமானவையாகும். ஆனால், வறுமையான, அல்லது அபிவிருத்தியடையும் சமுதாயங்களில் பாவனை குறைவானது எனப் பொதுவாகத் தெரிகின்றது. புரதக் குறைபாடானது குவாஸியோர்கர் போன்ற பிரச்சினைகள் உட்பட நோயின் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லலாம். இச்சீரிய நிலைமையானது சிறுவர்களில் வளர்ச்சி குன்றுவதற்கும், எரிச்சலை ஏற்படுத்துவதற்கும், தசை தேய்வடைவதற்கும், ஈரல் சேதமடைவதற்கும் காரணியாக விளங்குகின்றது. வெளிப்படையான பிரச்சினையாக தெரியாத அதேவேளை, அது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்துவதற்கான தன்மையும் நிலவுகின்றது. இறைச்சி, மீன், முட்டைகள் போன்ற புரதம் நிறைந்த உணவு வகைகளைச் சமுதாயத்தின் மிகக் குறைந்த சதவீதத்தினர், அதாவது 2.2% இலிருந்து 72.2% வரையிலானோர் உட்கொள்கின்றனர் என ஆய்வு காட்டுகின்றது. சிறுவர்களில் புரதக் குறைபாடு இலங்கையின் அபிவிருத்தி மீது தாக்கமொன்றைக் கொண்டிருக்கும் எனச் சொல்லப்படுகின்றது. மூளைச் சக்தியின் விளைவே அபிவிருத்தி என்பதுடன், புரதத் தொகுப்புக்களின் நடைமுறையின் வழியாக மூன்று வயதுக்குள் மூளை பெரிதும் வளர்ச்சியடைந்து விடுவதனால், இளம் வயதில் புரதத்தின் பாவனை அத்தியாவசியமானதாகும்.

●

போஷாக்கின்மையைச் செயற்றிறனாக கவனத் திற்கு எடுக்கும் பாரிய பிரச்சினையாக சிறுவர்களை அடைய முடியாமை விளங்குகின்றது. நடைமுறையிலுள்ள உணவு விநியோகங்களின் பங்கீடும், பயன்பாடும் முக்கிய மானவையாகும். சிறுவர்களையும், பெற்றோர்களையும் போதிப்பதற்கான சிறந்த இடங்களாக பாடசாலைகளும், பெண்கள் சுகாதார நிலையங்களும் விளங்குகின்றன. சிறுவர்களுக்கு புரதம் செறிந்த மதிய போசனத்தை வழங்குவதற்கு, அல்லது குறைநிரப்புவதற்கு பாடசாலைகள் முயற்சிகளை எடுக்க வேண்டும். எனினும், சிறுவர்களுக்கு முழுமையாக நன்மையளிப்பதற்காக

புரதத்தின் வேறுபட்ட மூலகங்களைக் கணக்குக்கு எடுக்க வேண்டும் என்பதைக் கவனத்திற்கு எடுப்பது முக்கியமானதாகும். புரதம் செறிந்த உணவின் அதிகரித்த உற்பத்திகளும், பாரம்பரிய உணவின் புரத அடக்கத்தை அதிகரிப்பதற்கான வழிவகைகளும் அவசியமானவையாகும். இதற்கு அரசாங்கத்திற்கும், உணவு, கல்வி அதிகாரிகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு முக்கியமானதாகும்.

●

இலங்கைச் சிறுவர்களில் மிகவும் பொதுவான போஷாக்குப் பிரச்சினையாக போதியளவு உணவு உள்ளெடுக்காமை விளங்குகின்றது. உயர்வான விலையும், உணவுக்கான கஷ்டமான அடைதலும் என்பதன் கருத்து என்னவெனில், சகல குடும்ப உறுப்பினர்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதிய தொகையிலான உணவு இல்லாததேயாகும். தமது பிள்ளைகள் போதியளவு போஷாக்கினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக தாய்மார்கள் தங்களுக்கு வேண்டுமென்றே குறைவாக உணவைப் பரிமாறுகிறார்கள். ஆரோக்கியமான பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற தமது முயற்சியினால் அவர்கள் தாமாகவே போஷாக்கற்றவர்களாக விளங்குகின்றார்கள். போதியளவு உணவை உள்ளெடுக்காததன் விளைவாக உடல் சுருங்கும் நிலை ஏற்படுகின்றது. தமது உயரத்துடன் ஒப்பிடுகையில் குறைந்த நிறையைக் கொண்டுள்ள சிறுவர்களின் உடல் சுருங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. சிறுவர்களில் உடல் சுருக்கம் குறிப்பிடத்தக்களவில் உயர்வாக இருப்பது ஆய்வின் போது கண்டறியப்பட்டுள்ளது.

●

பெருமளவு சந்தர்ப்பங்களில் போதியளவு உணவை உள்ளெடுக்காததிற்கான பிரச்சினைக்கு வறுமையே காரணமாகவுள்ளது. இக்காரணியையும், உணவுக்கான அடைதலின் பருவகால மாற்றங்களையும் தலையீடுகள் கவனத்திற்கு எடுக்க வேண்டும். வடக்குக்கும், கிழக்கிற்கும் பலதரப்பட்ட குழுக்களினாலான உணவு நிவாரணத்தின் விநியோகம் பாதுகாப்பு காரணங்களுக்காக பெரும்பாலும் தாமதிப்பதால், அல்லது இரத்துச் செய்யப்படுவதனால், பிணக்கு வலயத்திற்கு வெளியே மிக வறுமையிலான சமுதாயங்களையும், பருவகால உணவு வேறுபாடுகளையும் கருத்திற்கு எடுப்பதற்கான அவசியம் இக்குழுக்களுக்கும், மற்றவைகளுக்கும் உள்ளது. குடும்பத்தினுள் போதனை, குறிப்பாக தாய்மார்களுக்கான போதனை மாற்றமொன்றைக் கொண்டு வருவதற்கான ஒரு வழியாகும்.

●

இலங்கைச் சிறுவர்களைப் பெரிதும் பாதிக்கும் வேறு போஷாக்கு பற்றாக்குறைகளில் இரும்பு, அயடீன், விட்டமின் A ஆகியன உள்ளடங்குகின்றன. இரும்புக் குறைபாட்டிலான இரத்தச் சோகையின் வீதம் குறிப்பிடத்தக்களவில் உயர்ந்த வீதத்தினாலானதாகும். 6 அமைவிடங்களில் நடத்தப்பட்ட ஆய்வில் 78.6 பெண்களும், 70.6 ஆண்களும் இரத்தச் சோகையினால் பீடிக்கப்பட்டிருந்தனர் எனக் கண்டறியப்பட்டது. இது அவர்களின் வளர்ச்சியில் பாரிய தாக்கத்தினைக் கொண்டிருந்தது. பருவமடைந்த பெண்களில் இரும்புச் சத்து குறிப்பிடத்தக்களவில் முக்கியத்துவம்வாய்ந்ததாக விளங்கியது. பெண்களில் இக்குறைபாடு மிக உயர்வாகக் காணப்பட்டது. அயடீன் குறைபாடு சீரிய பின்விளைவுகளை விளைவிக்கின்றது. இது தொண்டைக் கழல், சீரிய மனோநிலை குறைபாடு ஆகியவற்றை விளைவிக்கிறது. தொண்டைக்கழலின் உயர்வான வீதங்களுக்கு இலங்கை முகம் கொடுக்கின்றது. இது மனோநிலை அபிவிருத்தியை மட்டும் தாக்குவதில்லை. ஆனால், ஒருவரின் தோற்றத்தின் மீது அதன் வெளிப்படையாகத் தெரியக்கூடிய தாக்கங்களின் காரணமாக சமூகத் தாக்கத்தினைக் கொண்டுள்ளது. சகல சமுதாயங்களுக்கும், குறிப்பாக கிராமிய சமுதாயங்களுக்கு அயடீன் கலந்த உப்புப் பாவனைக்கான அடைதலை அளிப்பதும், அதற்கு ஊக்கமளிப்பதும் அத்தியாவசியமானதாகும். அயடீன் கலக்காமல் உப்பை விற்பனை செய்வது சட்ட விரோதமானதாகும். விட்டமின் A பற்றாக்குறை வீழ்ச்சியடைந்துள்ளது. பார்வையிழப்பு, கண்தொடர்பான நோய் போன்ற பிரச்சினைகள் மீளத் தோன்றுவதைத் தடுப்பதற்கான கவனத்தை அது இன்னும் வேண்டுகின்றது. விட்டமின் D பற்றாக்குறையும் பாரிய கரிசனைக்குரியது. இது சிறுவர்களின் எலும்புகள் வெளிப்புறமாக வட்டவில் போன்ற வடிவில் தோன்றுவதை விளைவிக்கின்றது. வில் போன்ற கால்களின் தோற்றத்தின் காரணமாகவும், சராசரி சிறுவருடன் ஓடுவதற்கும், விளையாடுவதற்கும், ஒன்றுகூடுவதற்கும் முடியாததன் காரணமாகவும் இது சிறுவருக்கான சமூகத் தாக்கங்களைக் கொண்டிருக்கின்றது.

●

உணவில் போஷாக்குகளின் சிறந்த சமநிலையும், உணவின் போதியளவு விநியோகமும் அத்தியாவசிமானவை என்பது மேற்படி கூற்றிலிருந்து தெரிய வருகின்றது. போஷாக்கு குறைபாட்டினைத் தடுப்பதும், அதை இளம் வயதில் கண்டுபிடிப்பதும் சிறுவரின் உடல்ரீதியான, மனோரீதியான, சமூக, பொருளாதார அபிவிருத்தியை பாதிக்கக்கூடிய நிரந்தரமான சேதத்தைத் தடுப்பதற்கான சிறந்த வழியாகும். இதைச் செய்வதற்கான சிறந்த வழியாக போதனை, விழிப்பியல் திட்டங்கள் ஆகியன விளங்குகின்றன. ஆனால், இதற்கு குறைநிரப்பு

கொழும்பு தமிழ்ச் சங்கம்

உணவூட்டலும், உணவு மான்யங்களும் அவசியப் படுகின்றன. வாழ்வில் பின்னர் ஒதுக்கப்படும் வளமானது நிரந்தரமான சேதத்தின் மீது தாக்கமொன்றைக் கொண்டிருக்கமாட்டாது. எனவே, போஷாக்கின்மை யானது அதிகளவு சமூக, பொருளாதார இழப்புக்கு பொறுப்பாக விளங்குகிறது.

●

குறிப்பாக பருவவயதில், பெண்கள் மத்தியில் உணவுத் தடை, அல்லது கட்டுப்பாடு தாக்கமொன்றைக் கொண்டிருக்கும். இறைச்சி (பெரிதும் இரும்புச் சத்து அதிகமானது), எண்ணெய் உணவுகள் போன்ற உணவு மீதான கட்டுப்பாடு சிங்கள சமுதாயங்களின் மத்தியில் மிகவும் பொதுவானது என ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது. இவ்வுணவுகள் 'எதிர்கால ஆரோக்கி யத்திற்கு சிறந்ததல்ல' என பெற்றோர்களினால் எண்ணப்படுகின்றது. உண்மையில், வளர்ச்சிக் காலத்தின் போது இவ்வுணவுகள் அதிகளவில் அவசியமானவையாகும்.

●

வேறு உணவுகள் சிறுவர்களுக்கான ஆரோக்கியப் பராமரிப்பினை வழங்குபவை எனக் காட்டப்பட்டுள்ளன என்பதுடன், எனவே, பிரச்சினையைத் தணிப்பதற்கான திட்டங்களின் நோக்காகவும் இருக்க வேண்டும். தாய்மாருக்கான போதனையானது அவர்களது தடுப்பு ஆரோக்கிய முறைகளுடன் தொடர்புபட்டதாகும். உணவையும், தனிப்பட்ட சுகாதாரத்தையும் கையாளும் போது இது சுகாதாரப் போக்கில் ஆதிக்கம் செலுத்துகின்றது. கற்றறிந்த தாயானவள் பாதுகாப்பான சூழலில் போஷாக்கான உணவையே பெரிதும் வழங்குவாள். அடிப்படைப் போஷாக்கிலும், சுகாதார நடவடிக்கைகளிலும் அவர்களது அறிவானது அவர்களது பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் பெரிதும் ஆதிக்கம் செலுத்துகின்றது. பெண்களின் போஷாக்கு நிலையானது அவர்களது பருவவயது, மற்றும் சிறுவர்பராய காலங்களின் விளைவிலானதாகும் என்பதுடன், இது பிள்ளை பெறுவதைப் பெரிதும் பாதிக்க முடியும். எனவே, 6 - 15 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான போஷாக்கு உணவு மீதான பாரியதொரு நோக்கு அவசிய மானதாகும்.

●

இலங்கை 99% நோய் பாதிக்கப்படாமை வீதத்தை தற்போது கொண்டுள்ளதையிட்டு பெருமைப்படுகின்றது. தொண்டைக் கரப்பன், ஈர்ப்புவலி, சிறுபிள்ளைவாதம், குக்கல், சின்னம்மை, காசநோய் ஆகியவற்றில் துரித வளர்ச்சியொன்று காணப் பட்டுள்ளது. குறிப்பாக இது அரசாங்கத்தினதும், உள்ளூர் சுகாதார அதிகாரசபைகளினதும் ஒத்துழைப்பைச் சம்பந்தப்படுத்தி நோய் பாதிக்கப்படாமையை நோக்கிய விஸ்தாரமான பொது சுகாதார திட்டத்தின் விளைவிலானதாகும். திட்டத்தின் வெற்றியைப் புறந்தள்ளி வைக்க முடியாது. அதனால், நீண்டகால நன்மைக்காக சிறுவர்களின் திருந்திய சுகாதாரத்தைக் கொண்டு வருவதற்காக கட்டியெழுப்பப் பட வேண்டும்.

●

பெற்றோருடனும், ஓரளவு நிலையான உறைவிடத்துடனும் உள்ள சிறுவர்கள் பற்றி நாம் இங்கு பேசியுள்ளோம். வீதியோரங்களில் வாழும் ஆயிரக்கணக்கான சிறுவர்களைப் பற்றியோ, அல்லது லட்சக்கணக்கான தொழில் பார்க்கும் சிறுவர்களைப் பற்றியோ நாம் குறிப்பிடவில்லை. மேலே குறிப்பிட்ட வர்களை விட அதிகளவு ஆபத்தை இச்சிறுவர்கள் எதிர்நோக்குவதுடன், வேறு பல பிரச்சினைகளுக்கும் சீரியளவில் முகம் கொடுக்கின்றார்கள். பெற்றோர் இன்றியும், பெரும்பாலும் கல்வியறிவு இன்றியும், வீதியோரத்துச் சிறுவர்கள் தமக்கு கிடைக்கும் உணவை நம்பியே வாழ்கின்றனர். அத்துடன் வாழ்க்கை நிலைமை களின் காரணமாக நோயின் உயர்வான ஆபத்தையும் எதிர்நோக்குகிறார்கள். வேலைபார்க்கும் சிறுவர்கள் எச்ஐவி/எயிட்ஸ் போன்ற பாலியல்ரீதியில் பரவும் நோய்கள், செவிமடுத்தல், கண்பிரச்சினை, முச்செடுக்கும் தொற்றுநோய்கள் உட்பட சுகாதார ஆபத்துக்களுக்கு முகம் கொடுக்கிறார்கள். நீண்ட நேரம் வேலை செய்வதனால் மிதமிஞ்சிய களைப்பு, போஷாக்கின்மை, சாப்பிடுவதற்கு குறைந்த நேரம் போன்றவற்றினாலும் பாதிக்கப்படுகின்றார்கள்.

●

இலங்கையில் சிறுவரின் சுகாதாரத்தில் கண்கூடான முன்னேற்றங்கள், உறுதித்தன்மைகள் நிலவுவது தெரிகின்ற போதிலும், இன்னும் நிறையவே செய்ய வேண்டியுள்ளது. இலங்கையில் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு பாரிய பங்களிப்புக் காரணியாக வறுமை விளங்குகின்றது. குறிப்பாக வழங்கப்படும் பிரதான பராமரிப்பு மீது நோக்கினைக் கொண்டுள்ள பாதுகாப்பான, சமநிலையான உணவு முறைகள் மீதான போதனை, விழிப்பியல் திட்டங்கள் போன்றவை மான்யங்கள், குறைநிரப்பிகள், குப்பைகளைச் சுத்தஞ் செய்தல் என்ற அமைப்பில் அரசாங்க ஆதரவுடன் இணைக்கப்படுவது அவசியமானதாகும். சுகாதாரப் பிரச்சினைகளைத் தடுத்தல் எமது சிறுவர்களுக்கும், பொருளாதாரத்திற்கும் மட்டுமன்றி, ஆனால், முழுஅளவில் சமூகத்திற்கும் நன்மையளிக்கும்.

# அனோமா

பொதுநலவரசு சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு இருவருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. அதில் ஒருவரான புண்ணியகாந்தி விஜேநாயக்க எழுதிய இக்கதைக்கு அவரது பங்காக 1,250 ஸ்டேர்லிங் பவுண் கிடைத்துள்ளது.

இப்போட்டி பொதுநலவரசு மன்றத்தினால் ஆதரவளிக்கப்பட்டு, பொதுநலவரசு ஒலிபரப்புச் சங்கத்தினால் நிருவகிக்கப்பட்டுள்ளது.



சிந்தனையொன்று உதிக்கின்றது.

உன்னை அனோமா என்று அழைத்தால் என்ன?

அப்படியெனில் நீ இனங்காணப்பட்டிருக்கிறாய் என்று தானே அர்த்தம்?

அனோமா - ஒரு பெண், எனது நண்பி, அந்தரங்கச் சிநேகிதி.........

நாம் இருவருமே இதில் இப்பொழுது ஒன்றாக இணைந்துள்ளோம். அப்படித்தானே?

நான் ஏன் எனக்குள்ளேயே பேசிக் கொண்டிருக்கிறேன் என பாட்டி ஒரே கேட்கிறாள்.

நீ வாழ்வது பற்றி எனது பாட்டிக்கு ஒன்றுமே தெரியாது.

நான் உன்னுடனேயே பேசுகிறேன். ஏனெனில் நான் என்ன பேசுகின்றேன் என்று புரிந்து கொள்ளும் நிலையில் நீ மட்டுமே இருக்கிறாய்..... நீ உருவானதிற்கு பின்னால் உள்ள கதை.

நீ இன்னும் ஒரு கரு தான். வெளிப்புறத் திலிருந்து தோன்றும் கொடுமையிலிருந்து இயற்கை உனக்கு பாதுகாப்பளிக்கிறது.

நான் பேசும் பொழுது, நீ செவிமடுப்பாய். ஆனால், அது எனது தூக்கம் குழப்பப்படும் விதத்தில் உனது தூக்கத்தைக் குழப்பமாட்டாது. நான் அனுபவிக்கும் பயங்கரக் கனவுகளால் நீ குழப்பம் அடையமாட்டாய்.

ஆனால், இரவு வேளையில் எமது கட்டிலில் நான் உருண்டு புரள்வதை உன்னால் உணரமுடியும்.

துரதிர்ஷ்டவசமாக, நான் ஒரு குழந்தையோ, பெண்ணோ அல்ல. உன்னைப் போல நான் சிறியவளாக எனது அம்மாவின் கர்ப்பப்பையில் சுருண்டுள்ள கருவாக இன்னும் விளங்கினால், யாருமே என்னைத் தொட்டிருக்க முடியாத நிலையில் விளங்கியிருப்பேன்.

யாருடனும் பேசுவதற்கான அவசியமும் எனக்கு ஏற்பட்டிருக்காது.

எனக்கு இப்பொழுது பதினான்கு வயது. எனது தாயின் பிரசன்னத்தை இழந்திருக்கிறேன். அவள் தூரத்தில் - மத்திய கிழக்கில் வாழ்கிறாள்.

அவள் ஏன் அங்கு சென்றாள்?

எங்களுக்கு சுளைசுளையாக பணத்தை ஈட்டுவதற்காக அவள் அங்கு சென்றிருக்கிறாள்.

ஒன்றாகச் சேர்ந்து இருப்பதை விட, பணம் அவ்வளவு முக்கியமானதா?

அம்மா இங்கிருந்து செல்ல முன் அவளை எனக்கு நினைவிருக்கிறது. அவள் எனது தலை மயிரை வாருவாள். எனது முகத்தைக் கழுவி விடுவாள். என்னிடம் உள்ள ஒரேயொரு கோல வுடைக்கு கஞ்சி போடுவாள்.

இப்பொழுது எனக்கு வெள்ளைக் கோலவுடை தேவையில்லை. ஏனெனில் நான் இப்பொழுது பாடசாலைக்குச் செல்வதில்லை.

எனது தம்பி இன்னும் பாடசாலைக்குச் செல்கிறான்.

அவனுக்கு இப்பொழுது பதினொரு வயது. நான் எனது அம்மா இன்றி தவிப்பது போல் அவன் தவிப்பதில்லை. ஏனெனில் அவனது பாடசாலை உடுப்புக்களை நானே தோய்க்கின்றேன். அவனது மதிய போசனத்தை நானே சமைக்கின்றேன். ஆனால், அவன் எனது முகத்துக்கு நேரே கதைப்பதில்லை. அவன் என்னுடன் சரிவர பேசுவதும் இல்லை.

இது எனக்கு வலியை ஏற்படுத்துகிறது. அவன் ஏன் என்னை உதாசீனம் செய்கிறான் என்று எனக்குத் தெரியாது. அப்பாவுடனான அம்மாவின் ஸ்தானத்தை நான் சுவீகரித்துவிட்டேன் என அவன் நினைக்கிறான். அவன் ஒரு போதுமே அப்பாவின் அருகில் செல்வதில்லை.

எனது பாட்டிக்கு தெளிவாகப் பார்க்கவோ, கேட்கவோ முடியாது. நான் ஏன் தொடர்ந்தும் பாடசாலைக்குச் செல்வதில்லை என அவள் ஒரு போதுமே கேட்கமாட்டாள். நான் வீட்டில் இருந்து தேங்காய் துருவிக் கொடுத்து, அல்லது மிளகாயை பசையாக அரைத்துக் கொடுத்து உதவுவேன்

என்பதையிட்டு அவள் மகிழ்ச்சி மட்டுமே கொள்வாள்.

அனோமா, உன் ஒருத்தியுடன் மட்டுமே என்னால் பேச முடியும். யாரும் ஒருத்தருடன் நான் பேசுவது அவசியமாகவுள்ளது.

நான் சோர்வடைந்துள்ளேன். எந்நேரமும் பயத்தில் இருக்கிறேன்.

அம்மா என்ன சொல்வாள்? அம்மா அதைக் கண்டறியும் போது என்ன செய்வாள்?

அவள் திரும்பி வந்து, கண்டறிவதற்கு முன் நான் எதையாவது செய்ய வேண்டும்.

பகல் வேளையின் போது அப்பா என்னைப் பார்ப்பதில்லை, எனக்கு அருகில் வருவதுமில்லை.

இரவில் மட்டுமே, அம்மா இல்லை என்ற நினைப்பு வரும்போதே அவர் என்னை அழைப்பார்.

எனது தனிமையைப் பற்றி அவர் சிந்திப்பதில்லை. தனது தனிமையைப் பற்றித் தான்...........

இரவில் தம்பி சரிவரத் தூங்குவதில்லை என்பதை நான் கண்டிருக்கிறேன். நாம் இருவரும் இரவு மாறி இரவில் அப்பாவின் அழைப்பையிட்டு அச்சம் கொள்வோம். அவரிடம் அடிக்கடி மதுவின் நாற்றமும் வெளிப்படும்.

இந்த குடித்தனத்தைப் பராமரிப்பதற்கு பாட்டிக்கு வயது போய்விட்டது. இதற்கான பொறுப்பை யாராவது இளமையான ஒருவரிடம் - அம்மாவின் தங்கை, அதாவது சின்னம்மாவிடம் அம்மா விட்டிருக்க வேண்டும். அப்பாவின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய யாராவது ஒருவர்....... அப்பாவின் தேவைகளை அவள் மறந்துவிட்டாளா?

அனோமா, நான் உன்னை எச்சரிக்கின்றேன். உன்னுடன் தொடர்பு கொள்வதற்கு அவசியப்படும் போது தொந்தரவு செய்வதற்கு முன்கூட்டியே எச்சரிக்கையை நான் விடுக்கவில்லை. அழுவதற்கு எனக்கு அவசியப்படும் போது, இரவு வேளையில் என்னால் படுக்க முடியாத போது யாரும் ஒருவருடன் பேச வேண்டும் என்ற எண்ணம் எழும் போது நான் உனக்கு தொந்தரவு செய்கிறேன். அப்பாவுக்கு மட்டும் ஆறுதல் அவசியம் என்று இல்லை. அவரது தேவைகள் உடல்ரீதியானவை. எனது தேவை பேச்சுத்துணையே.

எனக்கு இது நடக்க வேண்டும் என்று அம்மா விரும்பி இருக்கமாட்டாள் என்பது நிச்சயமே. நான் கற்புள்ளவளாக, அவள் திரும்பி வரும்வரை கன்னித் தன்மையை இழக்காதவளாக விளங்க வேண்டும் என்று அவள் விரும்பினாள். நான் பருவமடைந்த போது, ஆண்களின் கண்களில் இருந்து என்னை மறைத்தது இன்னும் எனது ஞாபகத்தில் உள்ளது.

மாதவிடாய் நிற்கும் வரை, எனக்கு அருகில் அப்பாவையும், தம்பியையும் கூட அவள் வரவிடவில்லை. அவளே எனக்கு குளிப்பாட்டினாள். எனது தலைக்கு மேலே குடம் குடமாக நீரை வாரி இறைத்தாள். அவள் எனக்கு தங்கத் தோடுகளை அன்பளிப்புச் செய்தாள். எனது அழுக்கான உடுப்புக்களைச் சுத்தமாகத் தோய்த்துத் தந்தாள். இதனால் தான் சகலவுமே பிரமிப்பாக இருக்கின்றது. இவ்வளவு கவனம் எடுத்த பின்னர் என்னை ஏன் பாதுகாப்பு இன்றி விட்டுச் சென்றாள்?

அது அந்த சுளை சுளையான பணத்திற்குத் தான். அது எங்களை முற்றிலும் நாசமாக்கியுள்ளது.

அவள் வீட்டை விட்டுச் சென்ற பின் வீட்டுக்குள் பிசாசு புகுந்துவிட்டது. இரவில் என்னுடையதும், அப்பாவினதும் அழுக்கான உடுப்புக்களின் நாற்றத்தை என்னால் அகற்ற முடியவில்லை.

எவ்வளவு தான் குடம் குடமாக நீரை உடல்மேல் ஊற்றிக் குளித்தாலும், அந்த அழுக்கு நாற்றத்தை என்னால் அகற்ற முடியவில்லை.

அனோமா, அனோமா, நீ எங்கே இருக்கிறாய்? நீ என்னிடத்தில் இருந்து ஒளிந்திருக்கிறாயா?

நான் உன்னுடன் அளவுக்கதிகம் பேசும் போது நீ என்னிடத்தில் இருந்து விலகிச் செல்கிறாய் போலத்



தெரிகிறது. கர்ப்பப்பையில் கூட நான் உன்னைத் தொட்டிருக்கிறேனா? இதனால் தான் அமைதியாக, சத்தமின்றி, இனிமேலும் அசையாமல், எனக்குள்ளே கிடக்கின்றாயா?

அனோமா, நீ என்னைப் பயப்படுத்துகின்றாய். இது நீ திடீரென உன்னை அடையாளங் கண்டுள்ளது போன்றுள்ளது போல...... நான் உன்னுடன் பேசுவதையிட்டு நீ சந்தேகம் அடைந்திருக்கிறாய் போல........

நீ இனிமேலும் ஒரு கரு அல்ல, ஓர் அமைதியான, இரக்கமுள்ள செவிமடுப்பவள். நீ எனக்கு சவால் விடுக்கின்றாய். உனது பாதுகாப்பு உறைவிடத்தில் இருந்து நீ தப்பித்துவிட்டாய்.

நீ காயமடைந்துள்ளதுடன், என்னைக் குற்றஞ்சாட்டுகிறாய்.

அமைதியாகச் செவிமடுக்காமல், நீ என்னைக் கேட்கிறாய். "எனக்கு எதிர்காலம் உள்ளதா? நான் பிறப்பேனா அல்லது பிறப்புக்கு முன் எனது அழிவை நீங்கள் திட்டமிடுகிறீர்களா?"

அனோமா, சூழ்நிலைக்கு அமைய வருவதற்கு நீ எனக்கு நேரத்தை தருகிறாய் இல்லை. பேசுவதன் மூலம் எனது மனசாட்சியை நீ கிளப்பியிருக்கிறாய்.

இது பயங்கரமானது. எனக்கு நம்பிக்கைத் துரோகம் இழைக்கப்பட்டுள்ளது, நான் அழிக்கப்பட்டுள்ளேன் என உணர்கிறேன் அமைதியாகச் செவிமடுப்பவளாக நீ ஏன் விளங்கக்கூடாது?

நான் வேண்டுமென்றே உன்னை உருவாக்கவில்லை என்பதையிட்டு தயவு செய்து புரிந்து கொள்.

எனக்குள் அப்பாவே உன்னை உருவாக்கினார்.

நீ அவரின் பேரப்பிள்ளை, எனது பிள்ளை அல்ல.

நான் முழுமையான ஒரு பெண்ணாக வளர்ந்து, ஒரு மனிதனிடமிருந்து பெற்ற எனது சொந்தப்பிள்ளையைச் சுமக்க விரும்புகிறேன். எனது அப்பாவின் பிள்ளையை அல்ல.

நான் உன்னைப் புண்படுத்தியுள்ளேன். மீண்டும் உன்னைக் குழப்பியுள்ளேன்.

இன்னும் நீண்ட காலத்திற்கு எனக்குள் உன்னால் அமைதியாகத் திகழ முடியாது.

"நான் பிறப்பேனா?" என்று நீ கேட்பாய். அனோமா, நான் அதற்கு எவ்வாறு பதில் அளிப்பேன்?

இது எனக்கு எதிரான உனது வாழ்க்கை.

நீ பிறந்தால் நான் இறப்பேன்..... வெட்கத்தில்.

# சிறுவரின் வர்த்தகரீதியான பாலியல் சுரண்டல்

வர்த்தக நோக்கங்களுக்காகப் பலதரப்பட்ட பாலியல் செயற்பாடுகளை மேற்கொள்ளும்படி ஒரு சிறுவரை ஆளொருவர் நிர்ப்பந்திக்கும் போது சிறுவர் மீதான வர்த்தகரீதியான பாலியல் சுரண்டல் இடம்பெறுகின்றது. பலவழிகளில் சிறுவர் ஒருவர் பாலியல்ரீதியில் சுரண்டப்படலாம். உதாரணம்: விபச்சாரத்திற்குள் தள்ளப்படுதல், ஆபாசப் படங்களின் தயாரிப்புக்காகப் பயன்படுத்தல்.

சிறுவரின் வர்த்தகரீதியான பாலியல் சுரண்டல் பிரச்சனை 1980களில் தோன்றிய ஒன்றாகும். ஆரம்பத்தில் இவ்வாறான ஒரு பிரச்சனை இலங்கையில் நிலவுகின்றது என்பதை ஏற்றுக்கொள்ள அரசாங்க அதிகாரிகள் மறுத்துவிட்டனர். ஆனால், வெகுஜன ஊடகப் பிரசாரத்தினதும், அரசாங்க சார்பற்ற தாபனங்களின் செயற்பாட்டினதும் விளைவாக ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். மேலும், சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தை இலங்கை ஏற்றுக்கொண்ட பின்னர், பிரச்சனையைக் கவனத்தில் எடுப்பதற்கு அதிகளவில் அழுத்தம் இருந்தது.

இலங்கையில் சுமார் 30,000 "சிறுவர் விபச்சாரர்கள்" உள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. சிறுவர்களில் பெரும்பாலானோர் ஆண்களாவர். இவர்கள் நீர்கொழும்பில் இருந்து மாத்தறை வரை மேற்குக் கரையோரத்தின் வழியே செறிந்திருப்பதுடன், உல்லாசப் பயண போக்கிடப் பகுதிகளில் பிரதானமாக தொழிற்படுகின்றனர். உல்லாசப் பயணக் கைத்தொழிலின் கட்டுப்பாடற்ற, திட்டமிடப்படாத அபிவிருத்தியின் மறுதலையான தாக்கங்களில் இதுவும் ஒன்றாகும். இது தன்னினச் சேர்க்கையாளர்களின் சொர்க்கபுரியாக இலங்கை வருவதற்கும், பாலியல் உல்லாசப்பயணத்திற்கு சேரிடமாக சர்வதேசரீதியில் விளம்பரப்படுத்தப்படுவதற்கும் ஏதுவாக விளங்குகின்றது. இச் சிறுவர்களில் பெரும்பாலானோர் ஓரத்திற்குரிய சமுதாயங்களின் உறுப்பினர்கள் என்பதுடன், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து வருவதுடன், இவர்களில் பெரும்பாலானோர் பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களாகவும் விளங்குகின்றனர்.

தமது பெற்றோரின் ஆதரவுடனேயே பெரும்பாலும் இச் சிறுவர்கள் விபசாரத்தில் ஈடுபடுகிறார்கள். திருமணத்தின் முன்பாக பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்களுடன் இணைந்துள்ள சமூகக் களங்கம் பெரிதும் ஆண்களுக்கு பிரயோகிக்கப்படுவதில்லை என்பதுடன், குடும்பங்களின் போக்குகளும் பெரிதும் தளர்ச்சியாக விளங்குகின்றன. பெரும்பாலும் வர்த்தக ஆதாயத்திற்காக பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடும் மகனினால் பெறப்படும் வருமானத்தில் இருந்து முழுக் குடும்பமுமே நன்மைகளை அடைகின்றது.

சட்ட விரோதமான பாலியல் உடலுறவுக்கு சிறுவரைப் பயன்படுத்துவதற்கு மட்டும் அவர்களின் பாலியல் சுரண்டல் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வீடியோக்கள், படங்கள் மற்றும் சஞ்சிகைகள் போன்ற ஆபாசமான சாதனத்தை உருவாக்குவதற்கு, ஆண்களும், பெண்களுமாக சிறுவர்களைப் பயன்படுத்துவதும் இலங்கையில் பிரசாரம் ஈட்டப்பட்டுள்ள இன்னொரு செயற்பாடாகும். சட்டவிரோதப் பாலியல் உடலுறவுக்கு அவர்களைப் பயன்படுத்துவதுடன் இச் செயற்பாடு பெரிதும் பிணைக்கப்பட்டுள்ளது.

(கமீனா குணரத்ன எழுதிய "சிறுவர் துஷ்பிரயோகம்" என்ற நீண்ட கட்டுரையிலிருந்து)

# ஏழைச் சிறார்களுக்கு உரிமைகள் உள்ளனவா?

விஜிதா பெர்னாண்டோ

தென்கரையோரத்தில் உள்ள இச் சிறிய மீன்பிடி கிராமத்திற்கு இயற்கையானது அழகை அள்ளி வழங்கியுள்ளது. நீலநிறக் கடல், அசைந்தாடும் தென்னைகள், நிர்மலமான வானம், கடற்கரையோரங்களில் புள்ளிகளாகத் தெரியும் ஐந்து நட்சத்திர ஹொட்டேல்கள்.......... பெருமளவு உல்லாசப்பயணச் சிற்றேடுகளில் காணப்படுவது போன்ற ரம்மியமான சூழல் நிறைந்த இடம். இந்த அழகுக்கு பெரிதும் முரண்பட்ட நிலையில் அங்கு வாழும் மக்களின் வறுமை, தூரத்தே கடலில் - தமது ஜீவனோபாயத்தைக் கொண்டு நடத்துவதற்காக அற்பமான உழைப்பினை நம்பியுள்ள மக்கள், சூறாவளியினால் அடிக்கடி அரவணைக்கப்படும் கடல், கொந்தளிக்கும் கடலுக்கு தாக்குப்பிடிக்க முடியாத படகுகள், இயற்கையின் சீற்றத்தைத் தாக்குபிடிக்க முடியாத நிலையில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அவர்கள் எடுக்கும் பிரயத்தனங்கள்.........

இந்த மீன்பிடி சமுதாயத்தின் வாழ்க்கையில் நிறைந்த முரண்பாடுகள். மரப் பலகையினால் கட்டப்பட்ட அவர்கள் வீடுகள், பொலித்தீன் சாக்குகளினால் முடிமறைக்கப்பட்டுள்ளன. அவர்களின் வீடுகளை, சுற்றுப்புறத்தில் உள்ள உல்லாசப் பயண ஹொட்டேல்களின் நிழல்கள் போர்த்திவிடுகின்றன. கடற்கரையில், பொன்னிற மேனியிலான ஆண்களும், பெண்களும் அரைகுறை ஆடைகளில்........ அவர்களுக்கு அருகாக அழுக்கான ஆடைகளில், போஷாக்கற்ற சிறுவர்கள் பிச்சைக்காக கையை ஏந்துவதும்........ அவர்களுக்கு கடல் சிப்பிகளையும், பாலியலையும் விற்பனை செய்வதும்..........

ருவானுக்கு இப்பொழுது பதினெட்டு வயது. பன்னிரண்டு வயதில் இருந்து சில ஐரோப்பிய உல்லாசப் பயணிகளுடன் அவன் விபச்சாரத்தில் ஈடுபடுகிறான். இந்தத் தொழிலுக்கு அவனைத் தள்ளிவிட்டவர் அவன் சொந்தத் தந்தையே! மீன்பிடி வள்ளமொன்றில் எடுபிடியாக வேலை பார்க்கும் அவன் தந்தை டேவிட் மதுவுக்கு அடிமையாகியுள்ளதனால், தனது எட்டுப் பிள்ளைகளுக்கு உணவும், உடையும் அளிக்க முடியாத நிலையில் இருக்கிறான்.

கடற்கரையில் வாழ்வைக் கழிக்க ருவான் பழகிவிட்டான். வயது போன உல்லாசப் பயணிகளுக்கு பாலியல் சேவைகளை வழங்காத நேரங்களில், அவன் கடலோரத்தில் நண்பர்களுடன் அலைந்து திரிவான். நண்பர்கள் ஆரம்பத்தில் அவனுக்கு சிகரெட் புகைப்பதற்கு கற்றுக் கொடுத்தார்கள். இறுதியாக போதைவஸ்து.

இவை யாவும் ருவானை திருப்திப்படுத்தவில்லை என்பது ஆச்சரியமே!

"ஏதாவது கற்றுக் கொள்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிட்டியிருந்தால், ஓர் உபயோகமான தொழிலை நான் செய்திருப்பேன்" என அவன் சில வேளைகளில் சொல்வான். அப்பொழுதெல்லாம் அவன் கண்கள் மனவருத்தத்தில் வாடியிருக்கும்.

தனது சமுதாயத்தில் இவ்வாறான நிலைமையில் ருவான் மட்டும் விளங்கவில்லை. சமீர......... இன்னொரு மீனவனின் மகன். உல்லாசப் பயணிகளுடன், கடலோரத்தில் இலகுவான வாழ்க்கையை வாழலாம் என அவன் கண்டறிந்த போது, பாடசாலையில் இருந்து விலகிக் கொண்டான். அவன் ஒரு படி மேலேறிவிட்டான். பதினெட்டு வயதில் அவன் ஒரு தரகன். உல்லாசப் பயணிகளுக்காக பத்து, பன்னிரண்டு வயதுப் பையன்களை விநியோகிப்பது அவன் தொழில்.

சிறுவர்களின் உரிமை மீதான ஐ.நா. சமவாயத்தை இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளது. சிறுவரின் வாழ்க்கையின் சகல அம்சங்களைச் சார்ந்துள்ள முப்பது உரிமைகளை இது தெளிவாக எடுத்துக் கூறுகிறது. இனங்காட்டுவதற்கான, தேசியத்திற்கான உரிமை, பெற்றோர்களுடன் வாழ்வதற்கான உரிமை, கல்விக்கான உரிமை, சுகாதாரப் பராமரிப்புக்கான உரிமை, தகவலுக்கான உரிமை, விசேட பாதுகாப்புக்கான உரிமை, ஆரோக்கியத்திற்கு, கல்விக்கு, முன்னேற்றத்திற்கு ஊறுவிளைவிக்காத தொழில்களில் ஈடுபடுவதற்கான உரிமை, ஓய்வுக்கும், பொழுதுபோக்கு க்குமான உரிமை ஆகியன முக்கியமானவைகளில் சிலவாகும்.

ருவான், சமீர, மற்றும் இக்கிராமத்தில் உள்ள பெருமளவு சிறுவர்களைப் பொறுத்தளவில் இவ்வுரிமைகள் எவ்வாறு தொழிற்படுகின்றன? குறைந்த வருமானக் குடியேற்றங்களில் உள்ள சிறுவர்களின் முன்னேற்றத்திற்காக தொழிற்படும் நோர்வே சிறுவர் அரச சார்பற்ற தாபனமான றெட் பானாவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் இது நோக்காக விளங்கியது. இந்த ஆய்வை இத் தாபனம் கொழும்பில் அமைந்துள்ள பிராந்திய அரச சார்பற்ற தாபனமான INASIA எனப்படும் ஆசிய ஆராய்ச்சி,, கல்வி அபிவிருத்தி முயற்சிகள் (Initiatives in Research and Education for Development in Asia) என்ற தாபனத்துடன் இணைந்து நடத்தியது.

இந்த மீன்பிடி கிராமத்தின் மீதான ஆய்வை நோக்கும் போது, இச்சிறுவர்களின் பெருமளவு உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை என்பதை அறிவதற்கு ஒரு சிறிய கண்ணோட்டம் கூட போதுமானதாகும். அவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை; தமது ஆரோக்கியத்திற்கு ஊறுவிளைவிக்கின்ற ஏதோ ஒரு தொழிலில் உள்ளனர்; அவர்கள் போஷாக்கின்மையினால் பீடிக்கப்பட்டு ள்ளார்கள்; ஆரோக்கியத்திற்கு நிச்சயமாகவே ஒவ்வாத வீடுகளில் அவர்கள் வாழ்கிறார்கள்.

அஜந்தாவுக்கு பன்னிரண்டு வயது. அவன் ஒரு போதுமே பாடசாலைப் பக்கம் எட்டிக்கூடப் பார்த்ததில்லை. அவன் தனது தந்தையுடன் மீன்பிடிக்கச் செல்வான். சில வேளைகளில் வேறு மீனவர்களுக்கு - அவர்களுக்கு மலிவான கூலியாள் தேவைப்படும் போது அவர்களுடன் வேலை செய்வான். அவனது குடிசை மழையின் போது ஒழுகுகின்றது. அத்துடன் அவனோ, அல்லது அவனது சகோதரிகளோ, சகோதரர்களோ சுகவீனமடைந்த போது அவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல அவன் தந்தைக்கு போதியளவு பணம் இருக்கவில்லை.

தனது சிறுவர்களின் சேமநலனுக்கு உண்மையாகவே அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளதும், ஜனாதிபதியின் தலைமையிலேயே சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையொன்று அமைக்கப்பட்டுள்ளதுமான ஒரு நாட்டில் சிறுவர்களின் சில அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை என்பதை ஒருவர் நோக்கும் போது, அவர் நிச்சயமாகவே அதிர்ச்சியடைவார்.

இச்சிறுவர்களின் வாழ்க்கையில் ஒரு குறிப்பிடத்தக்க காரணி என்னவெனில், தமது வீடாகவும், தமது சூழலாகவும் விளங்கும் கடலோரத்துடன் அவர்களை விடுவித்துக்கொள்ள முடியாதவகையில் அவர்கள் தொடர்பைக் கொண்டுள்ளனர் என்பதாகும்.

விசேடமாக, தென்பகுதி கடற்கரையோரங்களில் வளமடைந்துள்ள உல்லாசப் பயணத்துடன், தன்னினச் சேர்க்கை, விபச்சாரம், விசேடமாக ஆண் விபச்சாரம், ஆபாச இலக்கியம், போதைவஸ்து விநியோகம், சட்டவிரோத மதுபான விநியோகம் போன்ற தகாத செயற்பாடுகளுடன் கடலோரம் இணைந்துள்ளது. இவ்வாறான ஒரு நிலைமை இளம் சிறார்களுக்கு, குறிப்பாக பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கும், பெற்றோர்களின் பராமரிப்பின் கீழே அறவே தங்கியிருக்காதவர்களுக்கும் ஒரு வளமிக்கதொன்றாக விளங்குகின்றது. பெரும்பாலும், போதைவஸ்துகள், பாலியல், ஆபாச இலக்கியம் என்றவாறு வளர்ந்துள்ள உலகத்திற்கு தமது பிள்ளைகள் செல்வதையிட்டு வறுமையினால் பீடிக்கப்பட்டுள்ள பெற்றோர் பாராமுகமாக இருக்கின்றார்கள், அல்லது அவர்களை அதற்குள் தள்ளிவிடுகின்றார்கள்.

பெருமளவு வஞ்சகங்கள் நிலவுகின்றன. தமது ஆரோக்கியத்திற்கு, கல்விக்கு, முன்னேற்றத்திற்கு ஊறு விளைவிக்கின்ற தொழில்களில் சிறுவர்கள் ஈடுபடக்கூடாது என்றும், போதைவஸ்துகளின் பாவனையிலிருந்தும், மதுபானத்தைக் கடத்துவதிலிருந்தும், உபயோகிப் பதிலிருந்தும் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் சமவாயம் கூறுகின்றது. இச்சிறுவர்கள் கடற்கரைகளில் "தொழில்" புரியும் போதும், போதைவஸ்துகளுக்கும், மதுபானங் களுக்கும் அறிமுகப்படுத்தப்படும் போதும் ஒரேயடியாக இவ்விரு உரிமைகளையும் மீறுகின்றார்கள்.

கல்விக்கான அவர்களது உரிமையானது தமது அற்பமான குடும்ப வருமானங்களைக் குறைநிரப்பு வதற்காக சிறுவர்களின் சுகாதாரத்திற்கு பெரிதும் ஆபத்தை விளைவிக்கும் தொழில்களுக்கு அவர்களது தரித்திரமான பெற்றோர் அவர்களைத் தள்ளுகின்றார்கள்.

ஓய்வுக்கும், பொழுதுபோக்குக்குமான அவர்களது உரிமையும், அவர்களைக் கடற்கரையோரங் களுக்கு விரட்டுவதுடன், தீங்கிழைக்கும் வேலையிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான அவர்களது உரிமையும், ஆரோக்கியத்திற்கான உரிமையும் உல்லாசப் பயணிகளுடன் ஆபத்தை விளைவிக்கும் தொடர்புகளுக்கு பலியாகும் போது மீறப்படுகின்றன.

பெண்களின் நிலைமையே மிகவும் வஞ்சகமானதாகும். கடற்கரைக்கு தொழிலுக்குச் செல்லாத தாய்மார்களினால் பெண்கள் பெருமளவுக்கு பாதுகாக்கப் படுகின்றார்கள். மீன்பிடித்தல் கட்டாயமாக ஓர் ஆணின் தொழிலாகும். இக்கிராமங்களில் உள்ள பெண்கள் ஏதாவது மீன்பிடி நடவடிக்கைகளில் - சில வேளைகளில், மீனை உலரவைத்தல், ஆண்கள் வீட்டுக்கு கொண்டு வரும் மீனைச் சமைத்தல் போன்றவை புறநீங்கலாக ஈடுபடுவதில்லை. ஆதலினால், பொழுது போக்கு, ஓய்வு, விளையாட்டு ஆகியவற்றிற்கான பெண்களின் உரிமைகளை இந்த பாதுகாப்பு மீறுகின்றது.

ஆனந்த தனது மீனவத் தகப்பனுடன் கடலுக்குப் போவதையோ, அல்லது கடற்கரைகளில் உலாவித் திரிவதையோ அவனின் பெற்றோர் விரும்பவில்லை. அவர்கள் அவனைப் பாடசாலைக்கு அனுப்பினார்கள். அவன் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெறாததினால் பாடசாலையை விட்டு விலகினான். தனது தந்தை நடத்தும் ஆபத்தான வாழ்க்கையைப் பார்த்த பின்னர், அவரைப் போல ஒரு மீனவனாக வருவதற்கு ஆனந்த விரும்பவில்லை. ஆனால், ஆனந்தவுக்கு தொழில் ஒன்றும் இருக்கவில்லை. தனது வீட்டின் வறுமையிலிருந்தும், கடலுடன் அவனது தந்தையின் ஆயுள் முழுவதுமான தொடர்பின் தடுமாற்றங் களிலிருந்தும் அவன் ஓசைபடாமலும், இரகசியமாகவும் சுதந்திரத்தைத் தேடிக் கொண்டுள்ளான்............ கடற்கரையோரத்தில் உல்லாசப் பயணிகளுடன்.

# முஸ்லிம் பெண்களுக்கு ஆகக் குறைந்த திருமண வயது

சூலானி கொடிகார

பாரம்பரிய இஸ்லாமிய சட்டத்தின் கீழ், பருவமெய்தும் வயதை அடைவதன் மூலம், திருமண காரணத்திற்காக ஒருவர் 'மேஜர்' நிலையை அடைகின்றார். *ஹிதாயா*வின் பிரகாரம், பையன் ஒருவன் பருவம் அடைவதற்கான முன்கூட்டிய வயது 12 என்பதுடன், பெண்களுக்கு அது 9 ஆகும். குறிப்பான சாட்சியம் இன்மையின் போது 15 வயதில் 'மைனர்' நிலை அற்றுப் போகின்றது. எனினும், திருமணத்திற்கு ஆகக் குறைந்த வயதாக இந்த வயதைக் கரிசனைக்கு எடுக்கமுடியாது என வாதம் புரியப்படலாம். முஸ்லிம் திருமணம் நிறைவேற்றப்படும் போதுள்ள வயதில் பருவமடைதல் செயற்படுகின்றது. ஆனால், பருவமெய்தும் வயதின் கீழுள்ள ஒரு சிறுமிக்கு முன்கூட்டிய வயதில் திருமணம் செய்து வைக்கப்படலாம்.

திருமணப் பாதுகாவலின் இஸ்லாமிய சட்டக் கருத்துருவானது, அல்லது *விலாயத் அல் ஜபார்* ஆனது 'மைனர்' நிலையில் உள்ள சிறுமிக்கு திருமணம் செய்து வைப்பதற்கான உரிமை பாதுகாவலருக்கு உள்ளது என்கிறது. ஆனால், அச்சிறுமி பூப்பெய்தும் வரை அவளது கணவனுக்கு அவளைக் கையளிக்க முடியாது என்ற மட்டுப்படுத்தலுக்கு உடன்படவேண்டும். எனினும், திருமண ஒப்பந்தத்திற்கான ஒரு தரப்பாக, பூப்பெய்துவதற்கு முன் ஒரு சிறுமி திருமணம் செய்து வைக்கப்பட்டால், அவள் பூப்பெய்தும் போது தனது திருமணத்தை ஏற்றுக் கொள்வதற்கான, அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறாள். இது பூப்பெய்தலின் விருப்பு என அறியப்படுகின்றது.

## இலங்கையில் சட்டநிலை

இலங்கையில் முஸ்லிம்களுக்கு ஆகக் குறைந்த திருமண வயது இல்லை. எனினும், சிறுவரிடையே திருமணங்களைத் தடை செய்வதற்காக பிரிவு 23இல் உள்ள 1951இன் சட்டமானது 12 வயதுக்கு குறைந்த முஸ்லிம் சிறுமி ஒருவரின் திருமணமானது, ஆய்வொன்றின் பின் பதிவைக் காதி அங்கீகரித்தாலன்றி, பதிவு செய்யப்படமாட்டாது எனக் குறிப்பிடுகின்றது. இத் தடையை அறிந்து கொண்டே ஒரு திருமணப் பதிவாளர் மீறினால், அல்லது அவருக்கு யாராவது ஆள் துணைபோனால், அல்லது உடந்தையாகவிருந்தால் அவர் தண்டனைக்குரிய குற்றத்திற்கு பாத்திரவாளியாகின்றார். இதற்கு 100 ரூபாய்க்கு மேற்படாத அபராதம், அல்லது 6 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு சிறைத்தண்டனை, அல்லது இரண்டும் விதிக்கப்படும் (பிரிவு 82ஐ பார்க்க). ஆனால், சட்டத்தின் கீழ் பதிவு கட்டாயமல்ல என்பதனால், இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டை உதாசீனம் செய்து சிறுவர் திருமணங்களை நிறைவேற்றலாம்.

## பருவமெய்தலின் விருப்பு

இலங்கையில் 1951இன் சட்டமானது பருவமெய்தலின் விருப்பினை விசேடமாகக் குறிப்பிடாத போதிலும், முதிர்ச்சியடையா வயதில் சிறுமி ஒருத்தி திருமணம் செய்து வைக்கப்பட்டால், இந்த விருப்பினை நடைமுறைப் படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறார் என சட்டம் அங்கீகரித்துள்ளது (மொகிடீன் பாவா எதிர் சேலத்தும்மா வழக்கைப் பார்க்க, 1937 2 MMDR 53).

## பொதுச் சட்டத்தின் கீழ் ஆகக் குறைந்த திருமண வயதும், பாலியல்வல்லுறவு மீதான குற்றவியல் சட்டச்கோவை ஏற்பாடும்

பொதுச் சட்டத்தினதும், கண்டிய சட்டத்தினதும் கீழ், ஆண்களுக்கும், பெண்களுக்கும் திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது தற்போது 18 ஆகும். மேலும், இலங்கையின் குற்றவியல் சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் கீழ் 16 வயதுக்கு குறைந்த பெண் ஒருவருடன் அவரது சம்மதத்துடன், அல்லது சம்மதமின்றி பாலியல் உடலுறவை ஒருவர் வைத்துக்கொண்டால் அவர் குற்றத்திற்கு, அல்லது பாலியல்வல்லுறவுக்கு பாத்திரவாளியாவார் [குற்றவியல் சட்டக்கோவையின் பிரிவு 363 (e)]. 1995இல் குற்றவியல் சட்டக்கோவைக்கான திருத்தமொன்றின் மூலம் சம்மதத்திற்கான வயது 12இலிருந்து 16க்கு உயர்த்தப்பட்டது [1995இன் 22ஆம் இலக்க குற்றவியல் சட்டக்கோவை (திருத்தம்) சட்டம்]. எனினும், பாலியல் உடலுறவின் போது ஆணொருவரின் மனைவியின் வயது 16க்கு குறையாமலும், 12 வயதுக்கு மேற்படாமலும் இருந்தால், சட்டபூர்வமாக இருவரும் பிரிந்து வாழாவிட்டால், பாலியல்வல்லுறவாக கருதப்பட மாட்டாது என திருத்தம் அங்கீகரித்துள்ளது [பிரிவு 363 (e) ஐப் பார்க்க]. முஸ்லிம்கள் மத்தியில் குறைந்த வயதிலான திருமணத்தின் காரணமாக இச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், ஆண் ஒருவரின் மனைவியாக 12 வயதுக்கு குறைந்த ஒரு பெண் இருக்கும் போது, அவளுடன் அவன் வைத்துக்கொள்ளும் பாலியல் உடலுறவு பாலியல் வல்லுறவுக்குட்பட்டதா என்பதற்கான வினா நிலவுகின்றது.

## சட்ட சீர்திருத்த முயற்சிகள்

முஸ்லிம் சட்டத்தில் சிறுவர் திருமணம் மீதான ஏற்பாட்டைத் திருத்துவதற்கான அவசியத்தை காதிச் சபை 1937இல் அங்கீகரித்து, அது பின்வருமாறு பிரகடனப் படுத்தியது: "........ முஸ்லிம் சமுதாயத்தின் சிறந்த ஆர்வத்தின் நிமித்தம், பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதன் மூலம் இச் சமூகக் கொடுமை ஒழிக்கப்படவேண்டும்."

| ஏற்பாடுகளை வழங்கும் விருப்பு | சீர்திருத்தத்திற்கான ஏற்பாட்டினை/ அவசியத்தை வழங்கும் ஆகக்குறைந்த விருப்பு | கருத்துரை |
|---|---|---|
| 12 வயதுக்கு குறைந்த பெண்ணின் திருமணத்தைப் பதிவு செய்வதற்கு காதியின் அனுமதி அவசியமாகும். - பிரிவு 23<br><br>பருவ வயதைச் சிறுவர் அடையும் போது, குழந்தைப் பராயத்தின் போது வாலியினால் ஒழுங்கு செய்யப்பட்ட திருமணத்தை தள்ளி வைப்பதற்கான உரிமை | ஆகக் குறைந்த வயது இல்லை. 'மைனர்' பெண் ஒருவருக்கு திருமணம் செய்து வைப்பதற்கு வாலிக்கு உரிமை உள்ளது | திருமண வயதுக்கான 1995 திருத்தங்கள் முஸ்லிம் சட்டத்திற்கு நீடிக்கப்படவில்லை. பாலியல்வல்லுறவுச் சட்டங்களின் திருத்தத்தில் முஸ்லிம்களுக்கு விசேட சலுகையும் செய்யப்பட்டுள்ளது. குற்றவியல் சட்டக் கோவையின் கீழ், 16 வயதுக்கு குறைந்த ஒரு பெண்ணின் அனுமதியுடன், அல்லது அனுமதியின்றி இடம்பெறும் பாலியல் உடலுறவானது பாலியல் வல்லுறவாகக் கருதப்படும். அப்பெண் 16 வயதுக்கு குறைவானவராகவும், 12 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருப்பதுடன், அம்மனிதரின் மனைவியாக இருந்தால் அது புறனடையாக விளங்கும். |

அது முதல் முஸ்லிம் சட்ட ஆராய்ச்சிக் குழுவானது அதன் மார்ச் 1937 அறிக்கையில் பின்வருமாறு முஸ்லிம் திருமணம், விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 23, மற்றும் 47க்கு திருத்தங்களைச் சிபாரிசு செய்தது:

அ) கீழே ஆ) க்கு உட்பட்டு, 16 வயதுக்கு குறைந்த ஓர் முஸ்லிம் ஆணுக்கு, அல்லது 14 வயதுக்கு குறைந்த ஒரு பெண்ணுக்கு திருமணம் நிறைவேற்றப்படக் கூடாது, அல்லது பதிவு செய்யப்படக் கூடாது.

ஆ) 12 வயதுக்கும், 14 வயதுக்கும் இடைப்பட்ட முஸ்லிம்கள் பெண் ஒருவரின் திருமணத்தை நிறைவேற்றுவதற்கான, அல்லது பதிவு செய்வதற்கான அங்கீகாரத்திற்கு காதி அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

இ) தடையின் ஏதாவது மீறல் தண்டனைக்குரிய குற்றமாக விளங்க வேண்டும் (இதற்கு பிரிவு 92இல் உள்ள பொது அபராதம் சேர்க்கப்பட வேண்டும்).

ஈ) தடையை மீறும் திருமணங்களின் சட்ட செல்லுபடித்தன்மை பாதிக்கப்படக்கூடாது (இது பிரிவு 16இனால் பாதுகாக்கப்படுகின்றது).

(முஸ்லிம் திருமணம் விவாகரத்து சட்டத்திற்கான திருத்தம்: அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கை என்பதற்கான ஆலோசனைகளைப் பார்க்க. 1993 மார்ச்சில் முஸ்லிம் சட்ட ஆராய்ச்சிக் குழுவினால் தயாரிக்கப்பட்டது.)

### வேறுநாடுகளில் முன்னேற்றகரமான சட்டமூலம்

பெருமளவு முஸ்லிம் நாடுகளின் தனிப்பட்ட சட்டவாக்கங்கள் தற்போது ஆண்களுக்கும், பெண்களுக்குமான ஆகக்குறைந்த திருமண வயதைக் குறித்துரைக்கின்றன. இது இஸ்லாமிய சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள பருவமெய்தும் வயதை விட உயர்வானதாகும். அல்ஜீரியா, இந்தோனிஷியா, ஈராக், லெபனான், சோமாலியா, சிரியா, டியூனிஷியா, துருக்கி ஆகியவற்றில் பாதுகாவலரின் சம்மதத்துடனும், நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடனும் புறநீங்கலான விடயமொன்றாக குறைந்த வயதுத் திருமணங்கள் நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்படலாம். இங்கு கூட திருமணத்தை முடித்து வைப்பதற்கு ஆகக்குறைந்த வயது எல்லையைச் சட்டம் முன் வைத்துள்ளது. இலங்கையில் முஸ்லிம் சட்டமானது திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதை அங்கீகரிக்கவில்லை. எதிர்காலத்தில் சட்டத்தில் சீர்திருத்தத்தைக் கொண்டு வருமுகமாக, இவ்விடயம் மீது முஸ்லிம் சமுதாயத்தின் பிரசித்தமான உறுப்பினர்களுடன் NCPH தற்போது பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது.

தென் ஆசியாவின் மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் சட்ட நிலை கணிசமானளவு பின்தங்கியுள்ளது என்பதைக் கவனத்திற்கு எடுங்கள். பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றில் 1929இன் சிறுவர் திருமணக் கட்டுப்படுத்தல் சட்டமானது சிறுவர் திருமணத்தைக் குற்றவியல் குற்றமாகக் கருதுகின்றது. எனினும், இந்த நியதியாக்க ஏற்பாடுகள் நிலவிய போதும், சிறுபராயத்தினரின் திருமணம் இன்னும் பரந்துள்ளது என்பதைக் கவனத்திற்கு எடுப்பது முக்கியமானதாகும். இச் செயன்முறை விசேடமாக கிராமியப் பகுதிகளில் இடம்பெறுகின்றது. தமது மகள்மார்களைச் சாத்திய மானளவு விரைவிலேயே - வழமையாக பெண்ணின் முதலாவது மாதவிடாய் சுற்றின் பின்னர் மணமுடித்துக் கொடுப்பது தமது புனிதமான கடமை என பெரும்பாலான கிராமவாசிகள் நம்புகின்றனர். தமது பாலியல், சமூக அத்துமீறல், வறுமை, சமூகப் பாதுகாப்பின்மை, பாலியல் வல்லுறவு ஆகியவற்றின் மீது தாம் கட்டுப்பாட்டை இழந்துவிடுவோம் என்பதே இளம் பெண்களை மிகவும் இளவயதில் மணமுடித்துக் கொடுப்பதற்கான வேறு காரணங்களாகும்.

| நாடு | பிரிவு | முன்னேற்றமான சட்டமூலம் |
|---|---|---|
| 1. பங்களாதேஷ் | ஹனா:.பி | 1929இன் சிறுவர் திருமணக் கட்டுப்படுத்தல் சட்டம் 18<br>16 வயதுக்கு குறைந்த பெண்ணினதும், 21 வயதுக்கு குறைந்த ஆணினதும் திருமணம் சட்டவிரோதமானதாகும். |
| 2. பாகிஸ்தான் | ஹனா:.பி | 1961இன் முஸ்லிம் குடும்பச் சட்டங்கள் கட்டளைச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1929இன் சிறுவர் திருமண கட்டுப்படுத்தல் சட்டம்<br>16 வயதுக்கு குறைந்த பெண்களினதும், 18 வயதுக்கு குறைந்த ஆண்களினதும் திருமணத்தை சட்டம் தடைசெய்கின்றது. மீறலைப் பொறுத்தளவில், மணமகனுக்கு, அல்லது மணமகளுக:கு அபராதம் விதிக்கப்படமாட்டாது. ஆனால், பெற்றோர்/ பாதுகாவலர் மற்றும் வைபத்தை நடத்தியோர் சிறைத் தண்டனைக்கு, அல்லது அபராதத்திற்கு முகங் கொடுக்க வேண்டும். எனினும், பெற்றோரினால், அல்லது பாதுகாவலரினால் ஒப்பந்தப்படுத்திய 'மைனரின்' திருமணத்தை சட்டப்படியாக செல்லுபடியானது என சட்டம் ஏற்றுக்கொள்கின்றது. ஆனால், ஆண், அல்லது பெண் பருவமெய்தலின் விருப்பினை வெளிப்படுத்தலாம் என்பதுடன், திருமணத்தை விலக்கிவைக்க முடியும். திருமணம் நிறைவேற்றப்படாவிட்டால், இந்த விருப்பினை பெண்ணானவள் 16 வயதை அடையும் போது நிறைவேற்றிக்கொள்ளலாம் (அவள் 18 வயதை அடையும் முன்). |
| 3. இந்தியா | ஹனா:.பி | 1929இன் சிறுவர் திருமணம் கட்டுப்படுத்தல் சட்டம் (1978இல் திருத்தப்பட்டது)<br>திருமணத்திற்கு ஆண்களுக்கான ஆகக் குறைந்த வயது 21 என்பதுடன், பெண்களுக்கு இது 18 வயதாகும். சட்டத்தின் மீறலானது திருமணத்தின் செல்லுபடி தன்மையைப் பாதிக்கமாட்டாது. ஆனால், சட்டத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள அபராதங்களுக்கு உட்படுகின்றார்கள். |
| 4. அல்ஜீரியா | மாலிகி | 1984இன் குடும்பச் சட்டக்கோவை - உறுப்புரை 7<br>திருமணத்திற்கு சட்டபூர்வ வயது ஆண்களுக்கு 21 என்பதுடன், பெண்களுக்கு 18 ஆகும். சம்பந்தப்பட்டவர்களின் ஆர்வத்தின் பேரில், அல்லது வேறுவகையில் உகந்தது என்றால் வயது தேவைப்பாட்டினை காதி விட்டு கொடுக்கலாம். |
| 5. ஈராக் | ஹனா:.பி | 1959இன் தனிப்பட்ட அரசாங்கங்கள் சட்டக்கோவை (1978இல் திருத்தப்பட்டவாறு), உறுப்புரை 7 - 8<br>திருமண தகுதிக்கான நிபந்தனைகளாக பகுத்தறிவும், 18 வயது நிறைவெய்தலும் விளங்குகின்றன. சட்டபூர்வ பாதுகாவலரின் சம்மதத்துடன், தகுதியையும், உடல்ரீதியான உறுதித்தன்மையையும் நிரூபிக்கும் 15 வயதை பூரணப்படுத்திய ஆனொருவரின் திருமணத்தை காதி அனுமதிக்க முடியும். குறிப்பிட்ட காலத்தினுள் பாதுகாவலரின் சம்மதம் வழங்கப்பட வேண்டும். அதற்கு அவர் எதிர்க்காவிட்டால், அல்லது அவரது எதிர்ப்பு கரிசனைக்கு எடுப்பது பெறுமதியானதல்ல என்றால், திருமணத்திற்கு காதி அனுமதி அளிக்க முடியும். |
| 6. லெபனான் | ஹனா:.பி | 1917 - 1962 குடும்ப உரிமைகள் மீதான சட்டம், உறுப்புரை 4 - உறுப்புரை 7<br>திருமணம் செய்வதற்கான தகுதியாக ஆண் 18 வயதையும், பெண் 17 வயதையும் பூர்த்தி செய்திருக்கு வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாகும். பருவமெய்தி யுள்ளதாக பையன் ஒருவன் நிரூபித்து, அவன் போதியளவு முதிர்ச்சி யடைந்திருந்தால், அவன் திருமணம் செய்வதற்கு நீதிமன்றத்தினால் அனுமதிக்க முடியும். ஒரு பெண் போதியளவு முதிர்ச்சியடைந்து, பருவமெய்தியுள்ளதாக நிரூபித்தால், பாதுகாவலர் சம்மதத்தை அளிக்கும்பட்சத்தில் நீதிமன்றம் அனுமதியளிக்க முடியும். 9 வயதுக்கு குறைந்த ஒரு 'மைனர்' பெண்ணைத் திருமணம் செய்வதற்கு ஒருவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. |

| | | |
|---|---|---|
| 7. ரியூனிசியா | மாலிகி | 1956இன் தனிப்பட்ட நிலையின் சட்டக்கோவை - உறுப்புரை 5(1) மற்றும் 6 |
| | | 20 வயதைப் பூர்த்தி செய்யாத ஓர் ஆணும், 17 வயதைப் பூர்த்தி செய்யாத ஒரு பெண்ணும் திருமணம் செய்ய முடியாது. இந்த வயதுக்கு குறைந்த வயதுடையவரின் திருமணம் நீதிமன்றத்தின் விசேட அனுமதியில் தங்கியுள்ளது. இத்தகைய அனுமதி முக்கியமான காரணங்களுக்காகவும், சம்பந்தப்பட்டவர்களின் சந்தேகமற்ற ஆர்வத்தின் நிமித்தமும் மட்டுமே வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக, பாதுகாவலரின் சம்மதத்தை நீதிமன்றம் கொண்டிருக்க வேண்டும். சம்மதத்தை பாதுகாவலர் மறுத்தால், விடயமானது நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும். |
| 8. தெற்குயெமன் | ஷா∴பி | 1974இன் குடும்பச் சட்டம் - உறுப்புரை 7 |
| | | திருமணமொன்றை ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு ஆண் 18 வயதையும், பெண் 16 வயதையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். |
| 9. சிரியா | ஹனா∴பி | 1953இன் தனிப்பட்ட நிலையின் சட்டக்கோவை - பிரிவு 16 மற்றும் பிரிவு 18 |
| மலேஷியா | ஷா∴பி | திருமணம் செய்வதற்கு ஆண்கள் 18 வயதைப் பூர்த்தி செய்திருப்பதுடன், பெண்கள் 17 வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். பையன் 15 வயதாகவும், பெண் 13 வயதாகவும் இருந்து பருவமெய்துள்ளதை நிரூபித்து, திருமணம் செய்வதற்கு விரும்பினால், உடல்சார்ந்த முதிர்ச்சி நிரூபிக்கப்படும் பட்சத்தில் அதற்கான அனுமதியை காதி வழங்க முடியும். |

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# சிறுவர் இலக்கியம்

**பத்மா சோமகாந்தன்**

*"ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவர்கள்*
*நாடுகாக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்"*

இவ்வாறு எதிர்கால பிரஜையாக வீட்டையும், நாட்டையும் முன்னிலைப்படுத்தும் குடிமகனாக, நாட்டின் முன்னேற்றகரமான அறிவு, ஒழுக்கம், பண்பாடு, அரசியல் விஞ்ஞான விவேகங்களுக் கெல்லாம் தலைமமை தாங்கும் தத்துவம் மிக்கவனாக விளங்கப் போகின்றார்கள் இன்றைய சிறுவர்களே என்பதை ஆணித்தரமாகக் கூறிவைக் கின்றார் இக்கவிஞர்.

பயமறியாத இளங்கன்றுகளாக இச் சிறுவர் களைப் பற்றிப் பல்வேறு வகையான பழமொழி களுமுண்டு.

*'அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையாது'*

*'விளையும் பயிரை முளையிலே தெரியும்'*

*"ஆளுவான் பிள்ளையை மண் விளை யாட்டிலே தெரியும்"*

*"அடித்து வளர்க்காத பிள்ளையும், முறித்து வளராத முருங்கையும் உருப்படாது"*

*"ஆகும் காயைப் பிஞ்சிலே தெரியும்"* என ஒவ்வொரு நிலையில் வைத்துச் சிறுவர்களைப் பற்றிய தங்கள் எண்ணங்களைப் பதிவு செய்து ள்ளனர். இவற்றையெல்லாம் ஏன் இப்படி அடித்தடித்துச் சொல்கின்றார்களென்றால் எல்லோருக் குமே வித்தாக இருக்கும் குழந்தை பெரும் விருட்சமாகச் சடைத்துப் பருத்து நீண்டு உயர்ந்து வளர்ந்து தன்னையும், தான் ஊன்றி நிற்கும்

மண்ணையும் உறுதிப்படுத்த வேண்டும்; உன்னத மாக்க வேண்டும் என்ற ஆதங்கம் தான்.

சிறுவன் என்றால் மனிதனின் குறுகிய குறளான மனிதன் என நாம் கருதிவிட முடியாது. பூரணமான பூரணத்துவமான மனிதனின் தளிர்ப்பருவம் குழந்தைப்பருவம். இளமைப் பருவத்தினரையே சிறுவர் என நாம் கொள்ளலாம். சிறுவர் என நாம் கருதும் இப்பருவத்தினர் எல்லோருமே சமமானவர்கள் என நாம் கருதமுடியாது. ஏனெனில் அவர்கள் வயதிலும், வளர்ச்சியிலும் பாரிய வேறுபாடுள்ளவர் களாயிருப்பர். எனவே தான் உளவியல் வல்லுனர்களும் சுமார் ஐந்து ஆண்டு வரையுள்ளவர் களைக் குழந்தைகள் எனவும், அதற்கு மேற்பட்டு பன்னிரண்டு ஆண்டுகள் வரையுள்ளவர்களைப் பிள்ளைகள் எனவும், பதின்மூன்றுக்கும் இருபது ஆண்டுகளுக்கும் இடைப்பட்டோரை இளமைப் பருவத்தினர் எனவும் குறிப்பிடுவர். அதிலும் ஒன்றிலிருந்து மூன்று வரையும், நான்கிலிருந்து பன்னிரண்டு வரையும், பதின்மூன்றிலிருந்து இருபத்தொரு வயது வரையும் பிள்ளைகளின் விவேக வளர்ச்சி வெவ்வேறு தரங்களில் வெகுவேகமாகவும், சில காலங்களில் வெகு சாதாரணமாகவும் வளர்ச்சி பெறுகின்றது என்பது ஆய்வாளர்களின் கூற்றாகும். இதனை மனதிற்கொண்டே நம் ஒளவைப் பாட்டியும் *'இளமையில் கல்வி சிலையில் எழுத்து'* என மொழிந்தார். 23, 24 வயதிற்குப் பின்னர் விவேகத்தின் வளர்ச்சி சற்றுத் தணிந்து, அனுபவ அறிவுதான் அதிகமாக வெளிப்படுமென்பதும், விவேகத்தின் வளர்ச்சி தேக்கமடையும் என்பதும் கல்வி உளவியலாளர் கருத்தாகும்.

இவற்றையெல்லாம் நாம் மனதிற்கொள்ள வேண்டியிருப்பதனால், சிறுவருக்கு இலக்கியம் படைப்பதென்பது கத்தி முனையில் நடப்பது போன்ற வெகு அவதானத்துக்கும் நுட்பமாகக் கையாள வேண்டிய கலையென்பதையும் மறந்து விடக் கூடாது.

ஒவ்வொரு வயதிற்கேற்றபடி சிறுவர்களின் எண்ணங்கள், அபிலாஷைகள், விருப்பு வெறுப்புகள், நம்பிக்கைகள், ஆசைகள், தூண்டல்கள், துலங்கல்கள் என்பன மாறுபடும். இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டே சிறுவர் இலக்கியங்கள் ஆக்கப்பட வேண்டும். இந்த வித்தை - பெரிய கற்றறிந்தவராக இருக்கலாம், பல பட்டங்களையெல்லாம் பெற்ற ஆற்றல்மிக்கவராயிருக்கலாம், பல நூல்களை ஆராய்ந்திருக்கலாம். என்றாலும் எல்லோராலுமே இந்த வித்தையைக் கையாள முடியாது.

அப்படியாயின் யார் யாரால் சிறுவர் இலக்கியம் படைக்க முடியும் என்ற கேள்வி எம்மை எதிர்கொள்கிறது!

சிறுவர்களை அவர்களது ஆண்டுப் பகுப்பின்படி பார்த்தோம்.

சிறுவருக்கான இலக்கியம் என்னும் போது, இலக்கியமென்றால் என்ன? என்பதை முதலில் சிந்திப்போம்.

இலட்சியம் என்ற சொல்லிலிருந்தே இலக்கியம் பிறந்ததென்பர். இலக்கியம் எனும் போது நயத்தல், சுவைத்தல், இசைபட வாழ்தல், சிறந்த நோக்கங்களை நிறைவேற்ற வாழ்க்கையைத்



திட்டமிடல் எனப் பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கலாம். வாழ்வின் உண்மைகளை நன்கு உணர்ந்து அவற்றில் கூடிய நாட்டங் கொள்ளவும், உயர்ந்த பல இலக்குகளை நோக்கித் திட்டமிட்டுச் செயற்படவும் குறிப்பாகச் சொல்வதாயின் மாணவர்களுடைய உடல், உளவளத்திற்கேற்ற நிலையில் அவர்களது ஆளுமையை விருத்தி செய்வதில் கூடிய பங்காற்றுவது இலக்கியமே என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.

பெரியோர்களுக்கு- அதாவது வளர்ந்தோரு க்கு இலக்கியம் படைப்பதென்பது இலக்கியப்பரப்பில் ஆற்றலும், திறமையும் மிக்கவர்களுக்கு கைவந்த கலையாக அமைந்துவிடும். ஆனால், சிறுவர்களுக்கு இலக்கியம் படைத்தல் என்பது சற்று வில்லங்கமான செயற்பாடே என்பதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். வளர்ந்தவர்களுக்காக நாம் இலக்கியம் ஆக்கும் போது நம்மோடொத்த உணர்வுகள், இன்ப துன்பங்கள், ஆசைகள் முரண்பாடுகள், நம்பிக்கைகள் என்பவற்றை நாம் தெள்ளிதில் புரிந்து கொள்ள முடியும். நாமும் அவர்களைப் போல் சமமான உணர்வுகள், சிந்தனைகள், கஷ்டங்களுக்கு உட்பட்டி ருக்கும் ஒத்த அனுபவங்களைக் கொண்டிருப்பதால்.

ஆனால், சிறுவர்களுக்கென ஒரு கதை யையோ, கவிதையையோ, நாடகத்தையோ ஏதாவதொரு இலக்கிய வடிவத்தை வெளிக் கொணரும் போது நாம் அவர்களுடைய நிலைக்கு இறங்கி சிறுவர்களோ சிறுவர்களாக எம்மைச் சுதாகரித்துப் பாவனை செய்துகொண்டு, அந்த அரும்புகளின் உள்ளங்களில் முளைவிடும் உணர்வலைகள், ஆர்வங்கள், சிந்தனைகள், அவாக்கள், கற்பனைகள், தேடல்கள், அனுபவங்கள் வினாக்கள் என்பவற்றில் நாமும் தோய்ந்து, அந்நிலையிலிருந்து கொண்டே இலக்கியத்தை மேற்கொள்ளவேண்டும்.

சிறுவர்களின் பருவத்திற்கேற்பவும், சூழல் சுற்றாடலுக்கமையவும் மொழிநடை, கூறும் விஷயங்களின் கனதி, கற்பனைக் கவர்ச்சி - அவர்களின் ஆர்வம், திறமை, செயற்பாடு ஆகியவற்றைத் தூண்டக்கூடிய வகையிலும் படைப்புக்கள் ஆக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

சிறுவருக்கான இலக்கியத்தை ஆக்குபவர் பல விஷயங்களை அறிந்தவராக இருக்கலாம். புலமைமிக்கவராக, வித்துவானாக மிளிரலாம். ஆனால், தனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் குழந்தையின் தலையில் கொட்டிவிட முயற்சிப்பது தவறாகும். ஒரு குடம் நிறைந்த பால் அது திவ்வியமான பாலாக இருந்தாலும் கூட அத்தனையையும் ஒரே தடவையில் குடிப்பதற்குக் குழந்தைக்குக் கொடுக்க முடியாதே! கொள்கலன் அறிந்து தான் நாம் இலக்கியத்தையும் கொடுக்க வேண்டுமே தவிர, திணிப்பது என்பது பெரும் கொடுமையாகும். சுவைத்தல், நயத்தல், இன்புற்று மகிழ்தல் ஆகியவற்றைத் தூண்டும் செய்திகளே சிறுவர் இலக்கியத்தின் பாடுபொருளாக அமைந்து, அவர்களது அறிவு, ஆற்றல், திறமைகளைத் தூண்டித் துலங்க வைக்கும் தூண்டுகோலாகச் சிறுவருக்கான இலக்கியங்கள் அமைய வேண்டும்.

ஒரு வீட்டில் அத்திவாரம் எப்படிப் பலமுள்ளதாக அமைகிறதோ, அதற்கேற்பவே அவ்வீட்டின் எதிர்கால நிலைமை அமையும். அதே போல சுபீட்சமான எதிர்காலம் வேண்டிய ஒரு சமூகத்தின் இன்றைய சிறுவர்களான அத்திவாரங்கள் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றின் வளர்ச்சியோடு, சிறந்த விழுமியங்களையும் கைக்கொண்டு வாழப் பழகினால், அது சிறுவர் இலக்கிய கர்த்தாக்களின் பெரும் வெற்றியாக அமையுமென்பதில் ஐயமில்லை.

'*தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை*' என்பதற்கமைய முளையிலேயே நல்ல பசளையுள்ள மண்ணில் நாட்டற் பெற்ற வித்துகள் சடைத்து வளர்ந்து நற்பயனைத் தருமன்றோ?

உண்மை பேசுதல், சத்தியம் வெல்லும், பெரியோரை மதித்தல், பணிதல், எல்லாப் பிராணிகளிடமும் இரக்கம் கொள்ளுதல், அன்பு காட்டுதல் போன்ற விழுமியங்கள் என்றுமே வாழுந்தகையன, என்றுமே எம்வாழ்விற்கு அத்தியா வசியமானவை.

இலக்கியங்களினூடாக இத்தகைய விழுமியங்களை முளையிலேயே கற்று, ஏற்றுக் கொண்ட பிள்ளைகள் என்றுமே தவறிழைக்க மாட்டார்கள்.

எனவே அன்பாயிருத்தல், அறம் செய்தல், இரக்கம் காட்டல், நன்றிமறவாமை போன்ற பண்புகளை இளமைப் பருவத்திலேயே அவர்கள் மனதில் பதித்துவிட்டால், எதிர்காலத்தில் அவர்கள் பெரும் பண்பாளர்களாகத் திகழ்வர். இப்பண்புகளை நாம் வெறும் வார்த்தைச் சோடனைகளால் மட்டும் அலங்கரித்து வைத்தல் தவறு. இப்பண்புகள் பிள்ளைகளின் மனதில் ஊட்டம் பெற்று அவர்களது நடத்தையில் அவை பிரதிபலிக்கச் செய்யவேண்டும். இல்லையேல் எம்முயற்சி வெறும் சொல்லடுக்காக விழலுக்கிறைத்த நீராகிவிடும்.

*('சிறுவர் இலக்கியம்' பற்றிய பத்மா சோமகாந்தனின் வானொலி உரையிலிருந்து ஒரு பகுதி)*

# ஐ.நா. சமவாயம்
# சிறுவர் உரிமைகள்

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் நாற்பத்திநான்காவது தொடரில் 1989 நவம்பர் 20 அன்று 44/252 தீர்மானத்தினால் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நடைமுறைப்படுத்தல்: 2 செப்டெம்பர் 1990
1997 ஆகஸ்ட் உள்ளவாறு ஐக்கிய அமெரிக்கா, சோமாலியா ஆகியன தவிர்ந்த சகல நாடுகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## முன்னுரை

**தற்போதயை சமவாயத்தில் பங்கு கொள்ளும் நாடுகள்**

ஐக்கிய நாடுகள் சாசனம் பிரகடனஞ் செய்துள்ள கோட்பாடுகளின் படி உலகில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பன நிலை பெறவேண்டுமானால் மனித சமுதாயத்தின் சகல உறுப்பினர்களினதும் உள்ளார்ந்த கௌரவம், சமமானதும், பிறர் அபகரிக்க முடியாததுமான உரிமை ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளுதல் அடிப்படையான தென்பதைக் கருத்திற் கொண்டு,

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்தவர்கள், மனிதப் பிறவியின் அடிப்படை உரிமைகள் மீதும் கௌரவம், பெறுமதி ஆகியவற்றின் மீதும், தமக்குள்ள நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தி, விரிவான சுதந்திரத்துடன் சமூக முன்னேற்றத்தையும் சிறப்பான வாழ்க்கைத் தரங்களையும் மேம்படுத்த உறுதி பூண்டுள்ளனர் என்பதை நினைவு கூர்ந்து,

ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்திலும், மனித உரிமைகள் மீதான சர்வதேச ஒருப்பாடுகளிலும் வரையறுக்கப்பட்டுள்ள சகல உரிமைகளும் சாதி, நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது பிற கோட்பாடு, தேசிய அல்லது சமூகப் பூர்வீகம், ஆதனம், பிறப்பு அல்லது பிற தராதரம் போன்ற எத்தகைய பாகுபாடுமின்றி ஒவ்வொருவருக்கும் உரியனவெனப் பிரகடனஞ் செய்து உடன்பட்டுள்ளதென்பதை ஏற்றுக் கொண்டு,

சிறுபராயமானது, சிறப்பான பராமரிப்பும், ஆதரவும் பெறும் உரிமையுடையதென மனித உரிமைகள் மீதான சர்வதேச பிரகடனத்தில் ஐக்கிய நாடுகள் சபை அறைகூவியுள்ளமையை நினைவிற் கொண்டு,

குடும்பமானது சமுதாயத்தின் ஆதாரமான குழுவாகவும் அதன் சகல உறுப்பினர்களினதும், அதிலும் குறிப்பாக சிறுவர், சிறுமியரின் வளர்ச்சி, நல்வாழ்வு ஆகியவற்றுக்கு ஏற்ற இயற்கைச் சூழலாகவும் விளங்குகின்றபடியால், சமுதாயத்தில் அது தனக்குரிய முழுப் பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்வதற்கு அவசியமான பாதுகாப்பையும், ஒத்தாசையையும் அதற்கு அளித்தல் வேண்டுமென்பதில் நம்பிக்கைகொண்டு,

சிறுவர் தனது ஆளுமையை முழுமையாகவும், இசைவாகவும் விருத்தி செய்வதற்கு ஒரு குடும்பச் சூழலில், ஆனந்தமும், அன்பும், பற்றுணர்வும் உள்ள சுற்றாடலில் வளர வேண்டுமென்பதை ஏற்றுக் கொண்டு,

சிறுவர்கள் சமுதாயத்தில் தனி வாழ்க்கை நடத்துவதற்கு முற்று முழுதாகத் தயார்படுத்தப்படவும், ஐக்கிய நாடுகள் சாசனத்தில் வரையறுத்துள்ள ஆத்மார்த்தப் பண்புகளுக்கமைய, அதிலும் குறிப்பாக சமாதானம், கண்ணியம், சகிப்புத்தன்மை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய இலட்சிய உணர்வுடன் வளர்க்கப் படவும் வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு,

சிறுவருக்குச் சிறப்பான பராமரிப்பு அவசிய மென்பது 1924ஆம் ஆண்டின் சிறுவர்கள் உரிமைகள் பற்றிய ஜெனிவாப் பிரகடனத்திலும், 1959ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஏற்றுக் கொண்ட சிறுவர்கள் உரிமைகள் பற்றிய பிரகடனத்திலும் கூறப்பட்டுள்ளதென்பதையும், மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்திலும், குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒருப்பாட்டிலும் (குறிப்பாக 23, 24ஆம் உறுப்புரைகளில்) பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச ஒருப்பாட்டிலும் (குறிப்பாக 10ஆம் உறுப்புரையில்) சிறுவர் சிறுமியரின் நலனில் அக்கறை கொண்டுள்ள விசேட முகவர் நிலையங்கள், சர்வதேச அமைப்புகள் ஆகியவற்றின் நிரந்தர விதிகள், மற்றும் தொடர்புடைய ஒப்பந்தங்களிலும் அங்கீகரிக்கப் பட்டுள்ள தென்பதையும் மனதிலிருத்தி, சிறுவர்கள் உரிமைகள் மீதான பிரகடனத்தில் சுட்டிக்காட்டியுள்ளவாறு, சிறுவர் உடலாலும், உள்ளத்தாலும் முதிர்ச்சியற்றிருப்பதன் காரணமாக அவர் கருவில் இருக்கும் போதும், பிறந்த பின்னரும், முறையான, சட்டவாரியான பாதுகாப்பு உட்பட விசேட பாதுகாப்புகளும், பராமரிப்பும் அவருக்கு அவசியம் என்பதை மனதிற் கொண்டு,

தேசிய மற்றும் சர்வதேசவாரியாகக் சிறுவர்களைத் தயாரித்தல், தத்தெடுத்தல் தொடர்பான உறுப்புரையினைச் சிறப்பாகவும், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சேமநலன் என்பன சார்ந்த சமூக, சட்ட விதிகள் மீதான பிரகடனத்தின் உறுப்புரைகளைப் பொதுப்படையாகவும் நினைவு கூர்வதுடன், பாலியக் குற்றவாளிகளுக்கு நியாயம் வழங்குதல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் குறைந்தபட்ச நியம விதிகள், பெய்ஜிங் விதிகள், அவசரகாலத்தின் போதும், ஆயுதப் போராட்டத்தின் போதும் பெண்கள், சிறுவர்கள் ஆகியோரைக் காத்தல் சம்பந்தமான பிரகடனம் ஆகியவற்றையும் நினைவு கூர்ந்து,

உலகில் எல்லா நாடுகளிலும் சிறுவர், சிறுமியர் மிக மிகச் சிரமமான நிலைமைகளிலே வாழ்கிறார்கள் என்பதையும், அத்தகைய சிறுவர்களுக்கே விசேட கரிசனை அவசியமென்பதையும் ஏற்றுக்கொண்டு,

சிறுவர்களின் பராமரிப்புக்கும் இசைவான வளர்ச்சிக்கும் ஒவ்வோர் இன மக்களினதும் பாரம்பரியங்களும், கலாசார சீலங்களும் முக்கிய மென்பதைக் கவனத்திற் கொண்டு,

ஒவ்வொரு நாட்டிலும், அதிலும் குறிப்பாக வளர்முக நாடுகளில், சிறுவர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தற்குச் சர்வதேச ஒத்துழைப்பு முக்கியமென்பதை ஏற்றுக்கொண்டு, பின்வருமாறு உடன்பட்டுள்ளன:

## பாகம் I

### உறுப்புரை 1

தற்போதைய சமவாயத்தின் நோக்கங்களின் பொருட்டு 18 வயதுக்குக் குறைந்த மனிதப் பிறவி ஒவ்வொன்றும் ஒரு சிறுவர் எனக் கருதப்படும். சிறுவர் தொடர்பான சட்டத்தின்படி பராயமடையும் வயது முன்னதாகவே வரையறுக்கப்பட்டி ருந்தாலன்றி, மேற்படி வயதெல்லையே சிறுவரைக் குறிக்கும்.

### உறுப்புரை 2

1. அரசதரப்பினர் தமது பரிபாலனத்துள் வரும் ஒவ்வொரு சிறுவருக்கும், அவர் பெற்றோர் அல்லது சட்டப்படியான பாதுகாவலரின் சாதி, நிறம், பால், மொழி, மதம், அரசியல், அல்லது வேறு கோட்பாடு, தேசியம், இனம் அல்லது சமூகப் பூர்வீகம், ஆதனம், ஊனம், பிறப்பு, அல்லது வேறு அந்தஸ்து ஆகிய பாகுபாடு எதனையும் பொருட்படுத்தாது, இச்சமவாயத்தின் உரிமைகளை மதிக்கவும் உறுதிப்படுத்தவும் வேண்டும்.
2. அரச தரப்பினர் சிறுவரின் பெற்றோர், சட்டப்படியான பாதுகாவலர், அல்லது குடும்ப உறுப்பினர்களின் அந்தஸ்து, நடவடிக்கைகள், அவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள், அல்லது நம்பிக்கைகள் ஆகியவற்றின் மீதான எத்தகைய பாரபட்சம், அல்லது தண்டனையிலிருந்தும் சிறுவரைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

### உறுப்புரை 3

1. சிறுவர்கள் சார்பாக அரசாங்க, அல்லது தனியார் சமூகநல அமைப்புகள், நீதிமன்றங்கள், நிர்வாக அதிகாரசபைகள், அல்லது சட்டவாக்கக் குழுக்கள் எடுக்கும் எல்லா நடவடிக்கைகளிலும் சிறுவரின் நன்மையே முழுமுதற் கவனம் பெறல் வேண்டும்.
2. அரச தரப்பினர், சிறுவரின் நல்வாழ்வுக்கு அவசியமான பாதுகாப்பையும், பராமரிப்பையும் உறுதிப்படுத்து வதற்குப் பொறுப்பேற்றல் வேண்டும். இது விடயத்தில், சிறுவரின் பெற்றோர், சட்டப்படியான பாதுகாவலர், அல்லது சட்டப்படி பொறுப்புடைய தனிநபர்களின் உரிமைகளும், கடமைகளும் கவனத்தில் கொள்ளப் படல் வேண்டும்.
3. சிறுவர் பராமரிப்பு, அல்லது பாதுகாப்புக்கு பொறுப்பாயிருக்கும் நிறுவனங்கள், சேவைகள், வசதிகள் ஆகியனவற்றில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை, தகைமை மற்றும் திறமையான கண்காணிப்பு விடயங்களில், அதிலும் குறிப்பாக பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற துறைகளில், தகுதிவாய்ந்த அதிகாரிகள் வரையறுத்துள்ள விதிமுறைகளுக்கு அமைய ஒழுகுவதனை அரசதரப்பினர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

### உறுப்புரை 4

இச்சமவாயத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கும் உரிமைகளை நடைமுறைப் படுத்துவதற்கு உரிய சட்டவாக்க, நிர்வாக இன்னபிற நடவடிக்கை அனைத்தையும் அரசதரப்பினர் எடுத்தல் வேண்டும். பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் சம்பந்தப்பட்டமட்டில் அரசதரப்பினர் தம்வசமிருக்கும் மூலவளங்களை எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்தி நடவடிக்கை எடுப்பதுடன் அவசியம் ஏற்படும் போது சர்வதேச கட்டுக்கோப்பினுள்ளும் இயங்க வேண்டும்.

### உறுப்புரை 5

சிறுவர் தற்போதைய சமவாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் உரிமைகளைத் தனது பரிணாம வளர்ச்சித் திறனுக்கு அமைய அனுபவிப்பதற்குப் பொருத்தமான வழி முறைகளைக் காட்டுவதில் பெற்றோர், அல்லது உள்ளூர் வழக்கத்தின்படி நியமிக்கப்பெற்ற கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள், அல்லது சமூகத்தினர், சட்டப்படியான பாதுகாவலர்கள், அல்லது சட்டப்படி குழந்தைக்குப் பொறுப்பாயிருக்கும் ஏனையோருக்கு உள்ள கடப்பாடுகளை அரசதரப்பினர் மதித்தல் வேண்டும்.

### உறுப்புரை 6

1. ஒவ்வொரு சிறுவருக்கும் உயிர்வாழும் உரிமை உடன் பிறந்ததென்பதை அரசதரப்பினர் ஏற்றுக் கொள்கின்றனர்.
2. சிறுவரின் உய்வையும், வளர்ச்சியையும் தம்மால் முடிந்தவரை அரசதரப்பினர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

### உறுப்புரை 7

1. சிறுவர் பிறந்ததும் பதிவு செய்யப்படல் வேண்டும். அத்துடன் பிறந்ததும் தனக்கென ஒரு பெயரைப் பெறும் உரிமை, ஒரு தேசிய இனத்தை வரிக்கும் உரிமை, தன்னால் இயன்றவரை தன் பெற்றோரை அறிந்து, அவர்களின் பராமரிப்பைப் பெறும் உரிமை ஆதியனவும் அவருக்கு உண்டு.
2. இந்த உரிமைகள் தமது தேசிய சட்டவரையறைக்கு அமைய நடைமுறையாவதையும், அவற்றின்பால் தமக்குள்ள கடப்பாடுகள், இத்துறை சம்பந்தப்பட்ட சர்வதேச சாதனங்களின் கீழ் நிறைவேற்றப்படுவதையும் - அதிலும் குறிப்பாக, சிறுவர் நாடற்ற நிலைக்கு

ஆளாகுமெனக் காணும் பட்சத்தில், அரசதரப்பினர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## உறுப்புரை 8

1. சிறுவர் சட்டவிரோதமான தலையீடின்றி, சட்டம் அங்கீகரித்தவாறான, தேசிய இனம், பெயர், குடும்ப உறவுகள் அடங்கலான தனது ஆளடையாளத்தைப் பேணும் உரிமையுடைய தென்பதை மதிப்பதற்கு அரசதரப்பினர் உடன்படல் வேண்டும்.

2. சிறுவரின் ஆளடையாளத்தின் சில, அல்லது எல்லாக் கூறுகளும் சட்ட விரோதமான முறையில் மறுக்கப்பட்டால், அச் சிறுவரின் ஆளடையாளம் மீண்டும் நிலைநாட்டப்படும் பொருட்டு அரசதரப்பினர் உரிய உதவியும், பாதுகாப்பும் வழங்குதல் வேண்டும்.

## உறுப்புரை 9

1. ஒரு சிறுவர் முறையான சட்டத்துக்கும், நடைமுறைகளுக்கும் அமைய தகுதிவாய்ந்த நீதி விசாரணை அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு, அவர் நலனுக்கு அவசியமெனத் தீர்மானிக்கப்பட்டாலன்றி, பெற்றோரிடமிருந்து அவர்களின் விருப்பத்துக்கு மாறாகப் பிரிக்கப்படாதிருப்பதை அரசதரப்பினர் உறுதி செய்தல் வேண்டும். சிறுவரைப் பெற்றோர் இம்சைப்படுத்துதல், புறக்கணித்தல், அல்லது பெற்றோர் பிரிந்து வெவ்வேறு இடங்களில் வாழும் நிலையில் சிறுவரின் வசிப்பிடம் எதுவெனத் தீர்மானித்தல் போன்ற குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலேயே இவ்வாறான முடிவு அவசியமாகலாம்.

2. மேற்குறித்தவாறான விசாரணையின் போது, சிறுவரில் அக்கறையுள்ள சகல தரப்பினரும் விசாரணையில் பங்குகொள்ளவும், தமது கருத்துக்களை வெளியிடவும் வாய்ப்பளிக்கப்படல் வேண்டும்.

3. பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்ட சிறுவர், அவர் சேமநலனுக்கு உகந்ததல்லவெனக் கருதினாலன்றி, பெற்றோருடன் கிரமமான முறையில் சொந்த உறவையும், நேரடித் தொடர்பையும் பேணும் உரிமையுடையவரென்பதை அரசதரப்பினர் மதித்தல் வேண்டும்.

4. அத்தகைய பிரிவானது அரசதரப்பொன்று மேற்கொண்ட தடுத்துவைத்தல், சிறை வைத்தல், கடத்தல் போன்ற நடவடிக்கையினால், அல்லது (அரசாங்கத்தின் காவலில் இருக்கும் போது எக்காரணத்தினாலும் ஏற்படக்கூடிய மரணம் அடங்கலான) பெற்றோர் இருவரின், அல்லது ஒருவரின், அல்லது சிறுவரின் மரணத்தினால் நிகழும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட நாடு, பெற்றோர், சிறுவர், அல்லது குடும்பத்தின் மற்றோர் உறுப்பினருக்கு, பிரிந்து போன குடும்ப அங்கத்தினர் பற்றிய முக்கியமான தகவல்களைக் கேட்டால், அத் தகவல் சிறுவரின் நல்வாழ்வுக்குக் குந்தகம் உண்டாக்குமாயிருந்தால் அன்றி மற்றும்படி கொடுக்கப்பட வேண்டும்.

 விண்ணப்பம், அதனளவில் சம்பந்தப்பட்ட நபர்களுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாதிருப்பதை அரசதரப்பினர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## உறுப்புரை 10

1. குடும்பத்துடன் சேரும் பொருட்டு ஒரு சிறுவர், அல்லது அவர் பெற்றோர் ஓர் அரசதரப்பிலிருந்து வெளியேற, அல்லது நாட்டினுள் நுழையவெனச் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை அரசதரப்பினர் உறுப்புரை 9இன் 1ஆம் பகுதியிற் குறிப்பிட்ட கடப்பாடுக்கமைய தீர்க்கமாக, மனிதாபிமானத்துடன் துரிதமாகக் கவனித்தல் வேண்டும். அத்தகைய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்ததனால் விண்ணப்பதாரருக்கும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் எந்தவித பாதகமான விளைவுகளும் ஏற்படாதிருப்பதையும் அரசதரப்பினர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2. ஒரு சிறுவரின் பெற்றோர் வெவ்வேறு நாடுகளில் வசிப்பவர்களாயிருந்தால், தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் தவிர, மற்றும்படி அவர்களுடன் சொந்த உறவையும், நேரடித் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளும் உரிமை அச் சிறுவருக்கு உண்டு. இந்த நோக்கத்தின் பொருட்டு, உறுப்புரை 9 பந்தி 1இன் கடப்பாட்டுக்கு அமையவும், சிறுவர் அல்லது பெற்றோர் தமது சொந்த நாடு உட்பட எந்த நாட்டையும் விட்டு, தமது நாட்டில் பிரவேசிக்கவும் உரிமையுடையவர் களென்பதை அரசதரப்பினர் மதித்தல் வேண்டும். ஏதேனும் நாட்டை விட்டு வெளியேறும் உரிமை, சட்டப்படியான வரையறைகள், மற்றும் தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுச் சுகாதாரம், அல்லது ஒழுக்கவிதிகள், அல்லது பிறரின் உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றை மீறாததாயும், தற்போதைய ஒருப்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் பிற உரிமைகளுக்கு இசைவானதாயும் இருத்தல் வேண்டும்.

## உறுப்புரை 11

1. சிறுவர்கள் கள்ளத்தனமாக வெளி நாடுகளுக்கு கடத்தப்படுவதையும், அங்கிருந்து திருப்பி அனுப்பப்படாதிருப்பதையும் முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை அரசதரப்பினர் மேற்கொள்ளுதல் வேண்டும்.

2. இதன் பொருட்டு அரசதரப்பினர் இருதரப்பு, அல்லது பலதரப்பு உடன்படிக்கைகளைச் செய்து கொள் வதையோ, ஏலவே நிலைபெற்றிருக்கும் உடன்படிக்கை களை அணுகுவதையோ ஊக்குவித்தல் வேண்டும்.

## உறுப்புரை 12

1. தானாகவே கருத்துகளை எண்ணித் துணியும் ஆற்றலுள்ள சிறுவருக்கு, அதனைப் பாதிக்கும் எல்லா விடயங்களிலும், தன் சொந்தக் கருத்தை வெளிப்படுத்தும் உரிமையை அரசதரப்பினர் உறுதிப்படுத்துவதுடன், சிறுவரின் வயதுக்கும், முதிர்ச்சிக்கும் அமைவாக, அதன் கருத்துக்களை உரிய முறையில் சீர்தூக்கிப் பார்க்கவும் வேண்டும்.

2. இதன் பொருட்டு, சிறுவரைப் பாதிக்கக்கூடிய எந்தவொரு நீதி மற்றும் நிர்வாக விசாரணைகளிலும் நாட்டின் சட்ட நடைமுறை விதிகளுக்கு அமைய, நேரடியாகவோ,

பிரதிநிதி ஒருவர் மூலமாகவோ, தோதான ஒரு குழு மூலமாகவோ தன் பக்கக் கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பு சிறுவருக்கு வழங்கப்படல் வேண்டும்.

### உறுப்புரை 13

1. சிறுவருக்குப் பேச்சுச் சுதந்திரம் இருத்தல் வேண்டும். வாய்மொழி, எழுத்து, அச்சுக் கருவி மூலமோ, கலை வடிவத்திலோ, அல்லது விரும்பிய மற்றெந்த ஊடகத்தின் மூலமோ எத்தகைய பூகோள எல்லைகளையும் கருத்திற்கொள்ளாது எல்லா வகையான சிந்தனைகள், தகவல்களையும் தேடவும், பெறவும், பிறருக்குப் பரிமாறவும் சிறுவருக்கு உள்ள சுதந்திரத்தையும் இந்த உரிமை அடக்குதல் வேண்டும்.
2. இந்த உரிமையைப் பிரயோகிப்பதில் சில கட்டுப்பாடுகள் குறுக்கிடலாம். ஆனால் இவை,

   (அ) பிறரின் உரிமைகளையும், நற்பெயரையும் மதிப்பதற்கு அல்லது,

   (ஆ) தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுச் சுகாதாரம், அல்லது ஒழுக்கம் ஆகியவற்றைப் பேணுவதற்கு சட்டத்தில் வரையறுக்கப்பட்டவையாகவும், அவசியமானவையாகவும் மட்டுமே இருத்தல் வேண்டும்.

### உறுப்புரை 14

1. சிந்தனை, மனச்சாட்சி, சமயம் ஆகிய சார்ந்த சுதந்திரத்திற்கு சிறுவர் உரித்துடையவரென்பதை அரசதரப்பினர் மதித்தல் வேண்டும்.
2. சிறுவர் தனது பரிணாம வளர்ச்சியின் ஆற்றலுக்கு ஏற்றவாறாகத் தனது உரிமைகளை ஆண்டு அனுபவிப்பதில் வழிகாட்டுவதற்குப் பெற்றோருக்கும், பொருத்தமான சந்தர்ப்பத்தில் அதன் சட்டப்படியான பாதுகாவலருக்கும் உள்ள உரிமைகளையும், கடமைகளையும் அரசதரப்பினர் மதித்தல் வேண்டும்.
3. ஒருவரின் சமயத்தை, அல்லது நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம், பொது மக்களின் பாதுகாப்பு, ஒழுங்கு, சுகாதாரம், நன்னெறிகள், அல்லது பிறரின் அடிப்படை உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றைப் பேணுவதற்கு அவசியமானவையாகவும், சட்டப்படி விதிக்கப்பட்டவையுமான வரையறைகளுக்கு மட்டுமே அமைந்ததாக இருக்கலாம்.

### உறுப்புரை 15

1. சிறுவர்கள் கூடுவதற்கான சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்று சேரும் சுதந்திரம் என்பன உடையவர்கள் என்பதை அரசதரப்பினர் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
2. ஒரு சனநாயக சமுதாயத்திலே தேசிய பாதுகாப்பு, அல்லது பொதுமக்களின் பாதுகாப்பு, பொது ஒழுங்கு ஆகியவற்றின் நலன் கருதியும் பொது மக்களின் சுகாதாரம், அல்லது நன்னெறிகள் ஆகியவற்றைப் பேணும் பொருட்டும், அல்லது பிறரின் உரிமைகளையும், சுதந்திரங்களையும் பேணும் பொருட்டும் அவசியமானவற்றையும், சட்டப்படி விதிக்கப்பட்டவற்றையும் தவிர, வேறு கட்டுப்பாடுகள் எவையும் இந்த உரிமைகளை அனுபவிக்கையில் சுமத்தப் படலாகாது.

### உறுப்புரை 16

1. சிறுவரின் அந்தரங்கம், குடும்பம், வீடு, அல்லது கடிதத் தொடர்பில் தன்னிச்சையாக, அல்லது சட்டவிரோதமாகத் தலையிடவோ, அதன் கண்ணியம், அல்லது நற்பெயர் மீது சட்டவிரோதமாகத் தாக்குதல் நடத்தவோ கூடாது.
2. இத்தகைய தலையீடு, அல்லது தாக்குதலுக்கு எதிராகச் சட்டத்தின் பாதுகாப்பைப் பெறும் உரிமை சிறுவருக்கு உண்டு.

### உறுப்புரை 17

வெகுசன ஊடகங்கள் ஆற்றும் முக்கியமான பணியை அரசதரப்பினர் அங்கீகரிப்பதுடன், சிறுவர் தகவல் களையும், தகவல்களைத் தரும் (நூல்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள் போன்ற) தகவற் சாதனங்களையும், அதிலும் விசேடமாக அதன் சமூக, ஆத்மார்த்த மற்றும் ஒழுக்க மேம்பாட்டுக்கும் உடல், உள ஆரோக்கியத்துக்கும் சிறப்பாகப் பயன்படக்கூடிய தகவல்களையும், தகவற் சாதனங்களையும் பல்வேறு தேசிய, சர்வதேச மூலங்களிலிருந்து பெறுதற்கான வழிவகைகளை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு, அரசதரப்பினர்,

(அ) சிறுவரின் சமூக, கலாசார நலனுக்கு உகந்ததும், உறுப்புரை 29இன் கருத்துக்கு அமைந்ததுமான சர்வதேச தகவல்களையும், தகவற் சாதனங்களையும் தயாரிப்பதிலும், பரிமாறிக் கொள்வதிலும், பரப்புவதிலும் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவித்தல் வேண்டும்.

(ஆ) இவ்வாறான தகவல்களையும், தகவற் சாதனங்களையும், பலதரப்பட்ட கலாசார, தேசிய, சர்வதேச மூலங்களில் தயாரிப்பதிலும், பரிமாறிக் கொள்வதிலும், பரப்புவதிலும் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவித்தல் வேண்டும்.

(இ) சிறுவர்களுக்கு உகந்த புத்தகங்கள், பிரசுரங்கள் வெளியிடப்படுவதையும், பரப்பப்படுவதையும் ஊக்குவித்தல் வேண்டும்.

(ஈ) ஆதிவாசிப் பரம்பரையை, அல்லது சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த சிறுவரின் மொழித் தேவைகளுக்கு வெகுசன ஊடகங்கள் விசேட கவனஞ் செலுத்துவதை ஊக்குவித்தல் வேண்டும்.

(உ) உறுப்புரை 12, 18 ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, சிறுவரின் நல்வாழ்வுக்கு ஊறுவிளை விக்கக்கூடிய தகவல்கள், தகவற் சாதனங்கள் ஆகியவற்றிலிருந்து சிறுவரைக் காப்பதற்கு நெறிமுறைகளை உருவாக்க ஊக்குவித்தல் வேண்டும்.

## உறுப்புரை 18

1. சிறுவரை வளர்த்து ஆளாக்குவதில் பெற்றோர் இருவருக்கும் பொதுவான பொறுப்புகள் உண்டென்னும் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்து வதற்கான உயரிய முயற்சிகளை அரசதரப்பினர் மேற்கொள்ளவேண்டும். சிறுவரை வளர்ப்பதிலும், ஆளாக்குவதிலும் முக்கியமான பொறுப்பு பெற்றோரை, அவர்கள் இல்லாத பட்சத்தில் சட்டப்படியான பாதுகாவலரைச் சார்ந்ததாகும். சிறுவரின் நலனே அவர்களின் முழுமுதற் கரிசனையாயிருத்தல் வேண்டும்.

2. அரசதரப்பினர் இச்சமவாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் உரிமைகளுக்கு உத்தரவாதமளித்து அவற்றைப் பரப்பும் பொருட்டு, பெற்றோரும் சட்டப்படியான பாதுகாவலர்களும் சிறுவரை வளர்ப்பதில் தமக்குள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான தகுந்த ஒத்தாசையை அளிப்பதுடன் சிறுவர்களின் பராமரிப்புக்கான நிறுவனங்கள், வசதிகள், சேவைகள் ஆகியவற்றின் அபிவிருத்தியை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

3. தொழிலாற்றும் பெற்றோரின் குழந்தைகள் தமக்குத் தகுந்த பராமரிப்புச் சேவைகளையும் வசதிகளையும் பெறும் உரிமையுடையவர்ளென்பதை உறுதிப்படுத்து வதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசதரப்பினர் மேற்கொள்ளவேண்டும்.

### *நீ பெண்ணாயிருந்தால்*

*இன்னும் பிறக்காத*
*என் குழந்தைக்கு*
*என் முத்தங்கள்*

*உன்னுடன்*
*புல் வெளியில் விளையாடி*
*கவிதைகள் வாசித்துக் காட்டி*
*கதைகள் சொல்லி*
*நட்சத்திரம் காட்டி*
*பூரித்து விட்டேன் மனசில்*
*நீயும் கையசைத்து*
*கால் நீட்டி*
*உடல் முறித்து*
*என் வயிற்றினுள்*
*உன் பரபரப்பைக் காட்டுகின்றாய்*

*உன் வெளி உலகம்*
*பூவும் புல்வெளியும்*
*ரத்தமும் முள்ளுமாய்*
*அதுவும் நீ பெண்ணாயிருந்தால்*
*என்றாலும் மென்ன*
*எப்போதிருக்கும்*
*என் முத்தங்கள்*

**எஸ். சுகந்தி சுப்பிரமணியன்**

## உறுப்புரை 19

1. பெற்றோர், சட்டப்படியான பாதுகாவலர், அல்லது பராமரிக்கும் வேறெவரினதும் கண்காணிப்பில் உள்ள சிறுவர்கள் வளரும் பருவத்தில், பாலியல் சார்ந்த இம்சை அடங்கலான உடலை, அல்லது உள்ளத்தைப் பாதிக்கக்கூடிய வன்செயல், காயம் அல்லது இம்சை, புறக்கணிப்பு அல்லது பராமுகமான பராமரிப்பு, கொடுமை அல்லது சுரண்டிப் பிழைத்தல் போன்ற சகல வகையான தீங்குகளிலிருந்தும் அதனைக் காப்பாற்றுதற்குரிய சட்ட, நிர்வாக, சமூக, போதனா நடவடிக்கைகள் அனைத்தையும் அரசதரப்பினர் மேற்கொள்ள வேண்டும்.

2. அத்தகைய நடவடிக்கைகளில் சிறுவர்களுக்கும், சிறுவர்களைப் பராமரிப்பவர்களுக்கும் தேவையான ஆதரவளிக்கக்கூடிய சமூகநலத் திட்டங்களை உருவாக்குவதற்கு ஏற்ற நடைமுறைகளும் அடங்குதல் வேண்டும். அது மட்டுமன்றி, நீதித்துறையினை ஈடுபடுத்துவதற்கு இசையும் வகையில் மேற்குறித்த வாறான தீங்குகளை இனங்காணுதல், அறியத்தரல், சாட்டுதல் செய்தல், விசாரித்தல், சிகிச்சையளித்தல் மற்றும் தொடர்ந்து அவதானித்தல் ஆகியவையும், வேறு விதமான தடுப்பு நடவடிக்கைகளும் இடம்பெறல் வேண்டும்.

## உறுப்புரை 20

1. தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ தன் குடும்பச் சுற்றாடலை இழந்த சிறுவர், அல்லது அதன் நல்வாழ்வுக்கு உகந்த சுற்றாடலை இழந்த சிறுவர், அரசாங்கத்தின் விசேட பாதுகாப்புக்கும், தாபரிப்புக்கும் உரித்துடையவராவர்.

2. அத்தகைய சிறுவருக்கு, அரசதரப்பினர் தமது தேசிய சட்டங்களுக்கு அமைய, மாற்றுப் பராமரிப்பினை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3. அவ்வாறான மாற்றுப் பராமரிப்பானது தாபரிப்புப் பெற்றோரிடம் கையளித்தல், இஸ்லாமியச் சட்டப்படியான கஃபால முறைச் சுவீகாரம், அல்லது அவசியமாயின் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் சேர்ப்பித்தல் போன்ற நடவடிக்கைகளையும் அடக்குதல் வேண்டும். தீர்வுகளை ஆராயும் போது, சிறுவரின் வளர்ச்சிப் பாங்கின் தொடர்பறாமை மற்றும் அதன் இன, மத, கலாசார, மொழிப் பின்னணி என்பன கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

## உறுப்புரை 21

சுவீகார முறையை ஏற்றுக் கொண்டுள்ள, அல்லது அனுமதிக்கின்ற அரச தரப்பினர் சிறுவரின் நல்வாழ்வே பிரதான குறிக்கோள் என்பதை உறுதிப்படுத்துவதுடன்,

(அ) சிறுவரைத் தத்தெடுக்கும் பணி தகுதி வாய்ந்த அதிகாரிகளின் அங்கீகாரத்துடனேயே நடைபெறுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும். இவ்வதிகாரிகள் பொருத்தமான சட்டங்களுக்கும் நடைமுறைகளுக்கும் அமையவும், சிறுவரின் பெற்றோர், உறவினர்கள், சட்டப்படியான பாதுகாவலர்கள் ஆகியோரின்

நிலைபரத்தைப் பொறுத்தவரையில் சுவீகாரம் அனுமதிக்கத் தக்கதென்பதற்கான சகல, நம்பிக்கையான தகவல்களின் அடிப்படையிலும், தேவைப்பட்டால், சம்பந்தப்பட்டவர்களின் அறிவு பூர்வமான உடன்பாட்டினைப் பெற்றும் மேற்படி சுவீகாரத்தை நிர்ணயித்தல் வேண்டும்.

ஆ) சிறுவரைப் பராமரிக்க, அல்லது சுவீகாரக் குடும்பத்தில் சேர்ப்பிக்க முடியாவிட்டால், அல்லது அதன் சொந்த நாட்டிலேயே முறையாக வைத்துப் பராமரிக்க முடியாவிட்டால் மற்றொரு நாட்டில் அதைச் சுவீகாரத்துக்குக் கொடுப்பது மாற்று நடைமுறையாக மேற்கொள்ளப்படலாமென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(இ) இவ்வாறு மற்றொரு நாட்டில் சுவீகாரத்துக்கு உள்ளான சிறுவர் தன் சொந்த நாட்டில் அனுபவிக்கக் கூடிய அதே பாதுகாப்புக்களையும், வாழ்க்கைத் தரங்களையும் பெறுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஈ) மற்றொரு நாட்டில் சுவீகாரத்துக்கு சிறுவரைக் கொடுப்போர், அதனால் முறைகேடாகப் பணம் சம்பாதிக்காதிருப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

(உ) பொருத்தமெனக் கருதும்பட்சத்தில், இந்த உறுப்புரையின் குறிக்கோளை மேம்படுத்தும் பொருட்டு, இருதரப்பு அல்லது பலதரப்பு ஏற்பாடுகள் அல்லது உடன்படிக்கைகளைச் செய்துகொள்ள வேண்டும். அத்துடன், மற்றொரு நாட்டில் சிறுவரை ஒப்படைக்கும் பணி தகுதிவாய்ந்த அதிகாரிகளால், அல்லது அமைப்புகளினால் மேற்படி கட்டுக்கோப்பு க்கு அமைய மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படு த்துதல் வேண்டும்.

## உறுப்புரை 22

1. சர்வதேச அல்லது உள்ளூர்ச் சட்டம் மற்றும் நடைமுறைகளுக்கு அமைய அகதி அந்தஸ்தைக் கோரும் சிறுவர் அல்லது அகதி எனக் கருதப்படும் சிறுவர், தனியாக இருந்தால் என்ன, பெற்றோர், அல்லது வேறெவருடனும் கூட இருந்தாலென்ன, இந்தச் சமவாயத்திலும், ஏனைய சர்வதேச மனித உரிமைகள் அல்லது மனிதாபிமான சாசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் பாதுகாப்பையும், மனிதாபிமானத்தின்பாற்பட்ட உதவியையும் பெற்று அனுபவிப்பதற்கு உரிமையுள்ளனரென்பதை ஏற்றுக் கொண்டுள்ள நாடுகள், அவ்வாறான உரிமைகளை மேற்படி சிறுவர் அனுபவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

2. இதன் பொருட்டு, அரசதரப்பினர், அத்தகைய சிறுவரைப் பாதுகாப்பதற்கும், அதற்கு உதவுவதற்கும், அகதிச் சிறுவர் எவரும் தன் பெற்றோருடன் மீண்டும் சேர்ந்து கொள்வதற்கு வேண்டிய தகவலைத் திரட்டும் பொருட்டு, பெற்றோர், அல்லது குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் தாபனம், ஏனைய தகுதிவாய்ந்த அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்புகள், அல்லது ஐக்கிய நாடுகள் தாபனத்துடன் ஒத்துழைக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் தகுந்த ஒத்துழைப்பை அளித்தல் வேண்டும். பெற்றோர், அல்லது குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களைத் தேடிப்பிடிக்க முடியாமற் போகும் சந்தர்ப்பங்களில், எக்காரணத்தைக் முன்னிட்டும் தன் குடும்பச் சூழலை நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ இழந்த சிறுவருக்கு வழங்கப்பட வேண்டுமென இச் சமவாயத்தில் குறிப்பிட்டிருக்கும், அதே விதமான பாதுகாப்பு அத்தகைய சிறுவருக்கும் வழங்கப்படல் வேண்டும்.

## உறுப்புரை 23

1. உள, அல்லது உடல் ஊனமுடைய சிறுவர், அதன் கௌரவத்தை உறுதிப்படுத்துவதும், சுயபலத்தை ஊக்குவிப்பதும், சமுதாயத்தில் தீவிரமாய் பங்கு கொள்ளக்கூடியதுமான நிலைமைகளில் முழுமையான, கண்ணியமான வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமென்பதை அரசதரப்பினர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2. ஊனமுற்ற சிறுவர் விசேட பராமரிப்பைப் பெறும் உரிமையைக் கொண்டுள்ளனர் என்பதை அரசதரப்பினர் அங்கீகரிப்பதுடன், தகுதியுடைய சிறுவருக்கும், அதன் பராமரிப்புக்குப் பொறுப்பாயிருப்பவர்களுக்கும் விண்ணப்பிக்கப்படும் உதவி, கைவசமுள்ள மூலவளங்களுக்கு அமைய வழங்கப்படுவதை ஊக்குவித்து உறுதிப்படுத்தவும் வேண்டும். இந்த உதவி சிறுவரின் நிலைபரத்துக்கும் பெற்றோர் அல்லது அதைப் பராமரிக்கும் ஏனையோரின் சூழ்நிலைகளுக்கும் பொருத்தமானதாயிருத்தல் வேண்டும்.

3. ஊனமுற்ற சிறுவருக்கு விசேட தேவைகள் உண்டென்பதை ஏற்றுக் கொண்டு தற்போதைய உறுப்புரையின் 2ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறான உதவியை முடியுமான போதெல்லாம் இலவசமாக வழங்குதல் வேண்டும். இது விடயத்தில் பெற்றோர் அல்லது சிறுவரைப் பராமரிப்போரின் நிதி நிலைமையைக் கவனத்திற் கொள்ள வேண்டும். மேலும், சிறுவரின் கலாசார, ஆன்மீக மேம்பாடு அடங்கலாக, முழுமையான சமூக ஒருமைப்பாட்டையும், தனிப்பட்ட முன்னேற்றத்தையும் அடைவதற்கு ஏற்றதான கல்வி, பயிற்சி, சுகாதார பராமரிப்புச் சேவைகள், புனர்வாழ்வுச் சேவைகள், தொழில்புரியும் பக்குவம், பொழுதுபோக்கு வாய்ப்புகள் ஆகியவற்றைச் சிறப்பான முறையிற் பெறுவதை உறுதிப்படுத்தும் பாங்கில் அவ்வுதவி அமைதல் வேண்டும்.

4. ஊனமுற்ற சிறுவரின் நோய்த்தடுப்பு, பராமரிப்பு, வைத்திய, உளவியல் மற்றும் நடைமுறைச் சிகிச்சை ஆகிய துறைகளில் பொருத்தமான தகவற் பரிமாற்றம் நடைபெறுவதை, சர்வதேச ஒத்துழைப்பு மனப்பான்மையுடன் அரசதரப்பினர் ஊக்குவித்தல் வேண்டும். இதில் புனர்வாழ்வுக்கான முறைகள், கல்வி, மற்றும் தொழில் சார்ந்த தேவைகள் பற்றிய தகவல்களைப் பரப்புதலும் அடங்கும். ஊனமுற்ற சிறுவர்கள் மேற்படி துறைகளில் தமது ஆற்றல்களை விருத்தி செய்வதற்கும், அனுபவங்களை வளர்த்துக்

கொள்வதற்கும் வாய்ப்பளிப்பதாக இது அமையும். இது விடயத்தில் வளர்முக நாடுகளின் தேவைகள் குறிப்பாகக் கவனிக்கப்பட வேண்டும்.

## உறுப்புரை 24

1. எய்தக்கூடிய மிக உயர்ந்த சுகாதாரத்தையும், நோய்வாய்ப்படும்பட்சத்தில் மிகச் சிறந்த சிகிச்சை மற்றும் சுகாதாரப் புனர்வாழ்வு வசதிகளையும் அனுபவிக்கும் உரிமை சிறுவருக்கு உண்டென்பதை அரசதரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். எந்தச் சிறுவருக்கும் இத்தகைய சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள் மறுக்கப்படாதிருப்பதை அரசதரப்பினர் உறுதிப்படுத்த முயலுதல் வேண்டும்.

2. அரசதரப்பினர் இந்த உரிமையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விசேட கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

   (அ) சிசு மற்றும் சிறுவர் மரண விகிதாசாரத்தைக் குறைத்தல்.

   (ஆ) ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு மேம்பாட்டிற்கு அழுத்தம் கொடுத்து எல்லாச் சிறுவர்களுக்கும் அவசியமான மருத்துவ உதவியும், சுகாதாரப் பராமரிப்பும் வழங்கப்படுவதை உறுதிப் படுத்துதல்.

   (இ) நோய் மற்றும் போசாக்கின்மையைக் குறைத்தல். இது விடயத்தில் சுற்றாடல் மாசடைவதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைக் கருத்திற் கொண்டு, ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு என்னும் கட்டுக்கோப்புக்குள், இலகுவாகக் கிடைக்கக் கூடிய நுட்பங்களைப் பிரயோகித்தல்; அத்துடன், சத்துள்ள உணவுகள், சுத்தமான குடிதண்ணீர் என்பன போதுமான அளவில் கிடைக்கச் செய்தல்.

   (ஈ) தாய்மாருக்குப் பிரசவத்தின் முன்னரும், பிற்பாடும் முறையான சுகாதாரப் பராமரிப்பு கிடைப்பதை உறுதிப்படுத்துதல்.

   (உ) சமுதாயத்தின் சகல பிரிவினரும் - குறிப்பாகப் பெற்றோரும், சிறுவர்களும் - அறிவுடையவர் களாகவும், கல்வி பெறும் வாய்ப்புடையவர் களாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவதுடன், சிறுவர் சுகாதாரம், போசாக்கு, தாய்ப் பாலூட்டுதலின் நன்மைகள், ஆரோக்கியமும், சுற்றாடற் சுகாதாரமும், விபத்துக்களைத் தடுத்தல் என்பன தொடர்பான அடிப்படை அறிவைப் பிரயோகிப்பதற்கும் ஆதரவளித்தல்.

   (ஊ) நோய்த் தடுப்புச் சார்ந்த சுகாதார பராமரிப்பு முறை, பெற்றோரை வழிநடத்துதல், குடும்பத்திட்டக் கல்வி, மற்றும் சேவைகள் ஆகியவற்றை விருத்தி செய்தல்.

3. சிறுவர்களின் ஆரோக்கியத்துக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய பாரம்பரிய நடைமுறைகளை ஒழிக்கும் பொருட்டு, பொருத்தமானதும், உறுதியானதுமான சகல நடவடிக்கைகளையும் அரசதரப்பினர் மேற்கொள்ள வேண்டும்.

4. அரசதரப்பினர் இந்த உறுப்புரையில் ஏற்றுக் கொண்டிருக்கும் உரிமையானது, காலக்கிரமத்தில் முழுமையாக நிலைநாட்டப்படுவதற்கு ஏதுவாகச் சர்வதேச ஒத்துழைப்பை வளர்க்கவும், ஊக்குவிக்கவும் முன்வரவேண்டும். இது விடயத்தில் வளர்முக நாடுகளின் தேவைகள் முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

## உறுப்புரை 25

தகுதிவாய்ந்த அதிகாரிகளினால், தாபரிப்பு, பாதுகாப்பு, அல்லது உளச்சார்பான அன்றேல் உடல் சார்பான சிகிச்சைக்கென விடப்பட்டுள்ள சிறுவர், அவருக்குக் கிடைக்கும் சிகிச்சை மற்றும் தாபரிப்பு நிலைமைகள் ஆதியன பற்றி அவ்வப்போது ஆராயப்பட வேண்டும் என்னும் உரிமையை அரசதரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## உறுப்புரை 26

1. ஒவ்வொரு சிறுவரும் சமூகக் காப்புறுதி அடங்கலான சமூக பாதுகாப்பின் நலனைப் பெறும் உரிமையுடையவர் என்பதை அரசதரப்பினர் ஏற்றுக்கொள்ளவதுடன், தத்தமது தேசிய சட்டத்துக்கமைய இந்த உரிமை முழுமையாகக் கிட்டுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

2. இந்த நன்மைகள் சிறுவரினால் அல்லது சிறுவரின் சார்பாகக் கோரப்படும் போது, முறையானவை எனக் காணும் பட்சத்தில், சிறுவரினதும், அவரின் பராமரிப்புக்குப் பொறுப்பாக இருப்பவர்களினதும் வாய்ப்பும் வசதிகள் மற்றும் சூழ்நிலைகளையும் விண்ணப்பம் தொடர்பான ஏனைய விடயங்களையும் கவனத்திற்கு கொண்டு, வழங்கப்படல் வேண்டும்.

## உறுப்புரை 27

1. ஒவ்வொரு சிறுவரும் அவரின் உடல், உள, ஆன்மீக, ஒழுக்க, சமூக மேம்பாட்டுக்கு ஏற்றவாறான வாழ்க்கைத் தரத்தினை அனுபவிக்கும் உரிமையுடையவரென்பதை அரசதரப்பினர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2. சிறுவரின் மேம்பாட்டுக்கு அவசியமான சூழ்நிலைகளை ஏற்படுத்தும் பிரதான கடப்பாடு பெற்றோர், அல்லது சிறுவருக்குப் பொறுப்பாயிருக்கும் ஏனையோரின் சக்திக்கும், பண பலத்துக்கும் ஏற்றவாறு நிறைவேற்றப்படல் வேண்டும்.

3. தேசிய நிலைமைகளுக்கும், தம் நாட்டின் சக்திக்கும் ஏற்றவாறு பெற்றோரும், சிறுவருக்குப் பொறுப்பா யிருக்கும் ஏனையோரும் இந்த உரிமையை அனுபவிப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கை களையும், அரசதரப்பினர் மேற்கொள்வதுடன் தேவை ஏற்படும் போது, குறிப்பாக போசாக்கு, துணிமணி, உறைவிடம் ஆகியவற்றிற்கான பொருளுதவிக்கும், ஆதரவுத் திட்டங்களுக்கும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

4. சிறுவரின் தபரிப்புச் செலவை, உள்நாட்டிலோ, வெளி நாட்டிலோ பெற்றோர் அல்லது சிறுவரின் செலவுக்குப்

பொறுப்பாகவுள்ள பிறரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் அரசதரப்பினர் எடுத்தல் வேண்டும். குறிப்பாக, சிறுவரின் நிதிக்குப் பொறுப்பாக இருப்பவர், சிறுவரின் நாட்டுக்கு வெளியே வசிப்பவராக இருந்தால், சர்வதேச உடன்படிக்கை களை நாடும் வாய்ப்பை வளர்க்க அல்லது அத்தகைய உடன்படிக்கைகளை நிறைவேற்ற ஊக்குவிப்பதுடன், பொருத்தமான வேறு ஏற்பாடுகளையும் அரசதரப்பினர் செய்தல் வேண்டும்.

## உறுப்புரை 28

1. கல்வி பயிலும் உரிமை சிறுவருக்கு உண்டென்பதை அரசதரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உரிமையைப் படிப்படியாகவும், சமவாய்ப்பென்னும் அடிப்படையிலும் அனுபவிப்பதற்கு வகைசெய்யும் பொருட்டு, அரசதரப்பினர் பின்வரும் நடவடிக்கைகளை விசேடமாக மேற்கொள்ள வேண்டும்.

   (அ) எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி கட்டாயமாகவும், இலவசமாகவும் கிடைக்கச் செய்தல்.

   (ஆ) பொது மற்றும் தொழில்சார் கல்வி உட்பட வெவ்வேறு தரப்பட்ட இடைநிலைக் கல்வியை ஊக்குவித்து ஒவ்வொரு சிறுவருக்கும் அது கிடைக்கச் செய்வதுடன், இலவசக் கல்வி, தேவைப்படுவோருக்கு நிதி உதவி அளித்தல் போன்ற பொருத்தமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

   (இ) எல்லோருக்கும் ஆற்றலின் அடிப்படையில் பொருத்தமான வழிமுறையில் உயர்கல்வி கிடைக்கச் செய்தல்.

   (ஈ) எல்லாப் சிறுவர்களுக்கும் கல்வி மற்றும் தொழில்சார் தகவல்களும், வழிகாட்டலும் கிடைக்கச் செய்தல்.

   (உ) சிறுவர்கள் பள்ளிக்கூடங்களுக்குக் கிரமமாகச் செல்வதை ஊக்குவிக்கவும், படிப்பை இடையில் நிறுத்திக் கொள்வோரின் தொகையைக் குறைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளல்.

2. பாடசாலையின் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தற்போதைய சமவாயத்துக்கு அமைவாகவும், பிள்ளையின் கௌரவத்துக்கு இசைவாகவும் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் அரசதரப்பினர் மேற்கொள்ள வேண்டும்.

3. அரச தரப்பினர் கல்வி தொடர்பான விடயங்களில் சர்வதேச ஒத்துழைப்பைப் பரப்பவும், ஊக்குவிக்கவும் வேண்டும். குறிப்பாக, உலகம் முழுவதிலும் அறியாமை, எழுத்தறிவின்மை என்பவற்றை இல்லாதொழிப்பதற்கு உதவும் வகையிலும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவு, நவீன போதனா முறைகள் முதலியன அனைவருக்கும் கிடைக்கச் செய்வதற்கும், இந்த ஒத்துழைப்பு அவசியமாகும். இது விடயத்தில் வளர்முக நாடுகளின் தேவைகள் குறிப்பாகக் கவனிக்கப்படல் வேண்டும்.

## உறுப்புரை 29

1. அரசதரப்பினர், சிறுவரின் கல்வி பின்வரும் விடயங்களின்பாற் நெறிப்படுத்தப்படல் வேண்டுமென உடன்படுகின்றனர்:

   (அ) சிறுவரின் ஆளுமை, திறமைகள், உள மற்றும் உடல் சார்ந்த ஆற்றல்கள் முழுமையாகப் பரிணமிக்கச் செய்தல்.

   (ஆ) மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள், மற்றும் ஐக்கிய நாடுகள் சாசனத்தில் வரையறுக்கப்பட்டிருக்கும் கோட்பாடுகள் ஆகியவற்றுக்கு மதிப்பளிப்பதை விருத்தி செய்தல்.

   (இ) சிறுவரின் பெற்றோரினது கலாசாரத் தனித்துவம், மொழி, ஆசாரங்கள், சிறுவர் வளரும் நாட்டின் தேசிய ஆசாரசீலங்கள், சிறுவரின் பூர்வீக நாட்டின் ஆசாரசீலங்கள் மற்றும் தன்னுடையதிலும் வேறுபட்ட நாகரீகங்கள் ஆகியவற்றை மதித்தலை விருத்தி செய்தல்.

   (ஈ) சுதந்திர சமுதாயமொன்றிலே, புரிந்துணர்வு, சமாதானம், சகிப்புத்தன்மை, ஆண், பெண் சமத்துவம், சகல மக்களுடனும் இன, தேசிய, சமயக் குழுக்களுடனும் பூர்வ பரம்பரை நபர்களுடன் நட்புறவு போன்ற பண்புகளுடனும் பொறுப்பாக வாழுவதற்குப் சிறுவரைப் பக்குவப்படுத்துதல்.

   (உ) இயற்கைச் சுற்றாடலை மதிக்கும் மனப்பாங்கை வளர்த்தல்.

2. இவ்வுறுப்புரையின், அல்லது உறுப்புரை 28இன் எப்பகுதியேனும் போதனா நிறுவனங்களை அமைப்பத[illegible] நடத்துவதற்கும் தனி நபர்களுக்கும், [illegible]தும் உள்ள சுதந்திரத்தில் குறுக்கிட லாகாது. ஆ[illegible]ும், இச்சுதந்திரம் தற்போதைய உறுப்புரை 1ஆம் பந்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் கொள்கைகளுக்கும், போதனா நிறுவனங்களில் புகட்டப்படும் கல்வியானது அரசினால் விதிக்கப்பட்ட குறைந்த தராதரங்களுக்கு அமைந்தாக இருத்தல் வேண்டுமென்னும் கட்டுப்பாடு களுக்கும் உட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

## உறுப்புரை 30

இனம், மதம், அல்லது மொழிவாரிச் சிறுபான்மையினரோ பூர்வீக பரம்பரை மக்களோ வாழும் நாடுகளிலே, சிறுவர் தன் இனத்துக்கே உரித்தான கலாசார, மத, அல்லது மொழி சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமையினை மறுத்தலாகாது.

## உறுப்புரை 31

1. இளைப்பாறுதற்கும், ஓய்ந்திருத்தலுக்கும், விளையாடு தற்கும், வயதுக்கேற்ற பொழுது போக்குகளில் ஈடுபடுவதற்கும், கலை, கலாசார நிகழ்ச்சிகளில் சுதந்திரமாகப் பங்குபற்றுதற்கும் சிறுவருக்குள்ள உரிமையை அரசதரப்பினர் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

2. கலை, கலாசார நடவடிக்கைகளில் பூரணமாகப் பங்கு கொள்ளும் உரிமை சிறுவருக்கு உண்டென்பதை அரசதரப்பினர் மதித்து, கலை கலாசார மற்றும் பொழுதுபோக்கு, ஓய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுதற்குத் தகுந்த சம வாய்ப்புகள் வழங்கப்படுவதை ஊக்குவித்தல் வேண்டும்.

## உறுப்புரை 32

1. பொருளாதாரச் சுரண்டலிலிருந்தும், ஆபத்து விளைவிக்கக்கூடிய, அல்லது சிறுவரின் படிப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தக்கூடிய அல்லது சிறுவரின் ஆரோக்கியம் அல்லது உடல், உள, ஆத்மீக, ஒழுக்க, அல்லது சமூக மேம்பாட்டுக்குப் பாதகம் விளைவிக்கக்கூடிய எத்தகைய வேலையிலிருந்தும் பாதுகாப்புப் பெறும் உரிமை சிறுவருக்கு உண்டென்பதை அரசதரப்பினர் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

2. தற்போதைய உறுப்புரை அமுல் செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு சட்ட, நிர்வாக, போதனாவாரியான நடவடிக்கைகளை அரசதரப்பினர் மேற்கொள்ளுதல் வேண்டும். இதன் பொருட்டும், ஏனைய சர்வதேச சாசனங்களின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டும் அரசதரப்பினர், குறிப்பாக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்:

   (அ) ஊழியத்தில் சேர்ந்து கொள்ளுதற்குரிய குறைந்தபட்ச வயதெல்லையை, அல்லது வயதெல்லைகளை வரையறை செய்தல் வேண்டும்.

   (ஆ) ஊழிய நிபந்தனைகள் மற்றும் வேலை நேரங்கள் தொடர்பாகப் பொருத்தமான சட்டங்களை வகுத்தல் வேண்டும்.

   (இ) தற்போதைய உறுப்புரை சிறப்பாக நிறைவேற்றப் படுவதை உறுதிப்படுத்துமுகமாக தகுந்த தண்டனைகள், அல்லது ஏனைய கட்டுப்பாடு களுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

## உறுப்புரை 33

சம்பந்தப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகளில் வரையறுத்தவாறான போதை வஸ்துகள் மற்றும் உள்ளத்தைப் பாதிக்கக்கூடிய பொருள்களைச் சட்ட விரோதமாக உபயோகிப்பதிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கவும் இத்தகைய பொருள்களைக் கள்ளத்தனமாகத் தயாரிப்பதற்கும், கடத்துவதற்கும் சிறுவர்களை உபயோகிப்பதைத் தடுக்க, சட்ட, நிர்வாக, சமூக மற்றும் போதனாவாரியான நடவடிக்கைகள் அடங்கலாக தகுந்த சகல நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அரச தரப்பினர் முன்வரவேண்டும்.

## உறுப்புரை 34

பாலியல் சார்ந்த சகல வகையான சுரண்டல்களிலிருந்தும், துர்ப்பிரயோகத்திலிருந்தும் சிறுவரைப் பாதுகாப்பதற்கு அரசதரப்பினர் பொறுப்பேற்க வேண்டும். இதனை நோக்கமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தடுப்பதற்கென சகல தேசிய, இருதரப்பு மற்றும் பலதரப்பு நடவடிக்கை களையும் அரசதரப்பினர் குறிப்பாக மேற்கொள்ள வேண்டும்.

(அ) எந்த வகையான சட்ட விரோதப் பாலியல் நடவடிக்கையிலும் ஈடுபடச் செய்யும் பொருட்டுப் சிறுவரைத் தூண்டுதல் அல்லது வற்புறுத்துதல்.

(ஆ) விபசாரம் அல்லது ஏனைய சட்டவிரோதப் பாலியல் நடவடிக்கைகளுக்குப் சிறுவர்களைப் பயன்படுத்திச் சுரண்டிப் பிழைத்தல்.

(இ) ஆபாசக் கேளிக்கைகளிலும், ஊடகச் சாதனங்களிலும் சிறுவர்களைப் பாலியல்ரீதியாகப் பயன்படுத்திச் சுரண்டிப் பிழைத்தல.

## உறுப்புரை 35

எந்த நோக்கத்துக்கேனும், அல்லது எந்த வகையிலேனும் சிறுவர்களைக் கடத்திச் செல்லுதல், விற்றல் அல்லது பரிமாற்றம் செய்தலைத் தடுக்கும் பொருட்டு, அரசதரப்பினர், தகுந்த தேசிய, இருதரப்பு, பலதரப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

## உறுப்புரை 36

சிறுவரின் சேமநலனுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய மற்றெந்த வகையான சுரண்டிப் பிழைக்கும் நடவடிக்கை களிலிருந்தும் அரசதரப்பினர் சிறுவரைப் பாதுகாத்தல் வேண்டும்.

## உறுப்புரை 37

அரசதரப்பினர் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(அ) எந்தச் சிறுவரும் சித்திரவதை, அல்லது வேறெந்தக் குரூரமான, மிருகத்தனமான, மானபங்கமேற்படுத்தக் கூடிய நடத்தைக்கோ, தண்டனைக்கோ உட்படுத்தப் படலாகாது. பதினெட்டு வயதுக்குட்பட்டவர் கள் இழைக்கும் குற்றங்களுக்கு மரண தண்டனையோ, விடுதலை பெறும் வாய்ப்பற்றவாறான ஆயுள் தண்டனையோ விதிக்கப்படலுமாகாது.

(ஆ) சட்டவிரோதமாக, அல்லது தன்னிச்சையாக எந்தப் சிறுவரினதும் சுதந்திரத்தைப் பறித்தலாகாது. ஒரு சிறுவரைக் கைது செய்தல், தடுத்துவைத்தல் அல்லது சிறையில் அடைத்தல் சட்டத்துக்கு அமையவே மேற்கொள்ளப்படல் வேண்டும். அதிலும் கடைசி நடவடிக்கையாகவும், பொருத்தமானளவு மிகக் குறைந்த காலக்கெடுவுக்குட்பட்டதாகவும் மேற்படி நடவடிக்கை அமைதல் வேண்டும்.

(இ) சுதந்திரம் மறுக்கப்பட்ட ஒவ்வொரு சிறுவரும் மனிதாபிமானத்துடனும் மனிதப் பிறவிக்குப் பிறப்புரிமையாகவுள்ள கௌரவத்துக்கு மதிப்பளிக்கும் விதத்திலும் அதன் வயதுக்குப் பொருத்தமான தேவைகளைக் கருத்திற் கொண்டும் நடத்தப்படல் வேண்டும். குறிப்பாக, சுதந்திரம் மறுக்கப்பட்ட

ஒவ்வொரு பிள்ளையும் அதன் நலனுக்குப் பாதகம் ஏற்படுத்தாது எனக் கருதும் பட்சத்திலன்றி, மற்றும்படி வயது வந்தவர்களிடமிருந்து பிரித்து வைக்கப்படல் வேண்டும். மேலும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களிலன்றி, மற்றும்படி தன் குடும்பத்தவர்களுடன் கடிதம் மூலமும் சந்திப்புகள் மூலமும் தொடர்பு வைத்திருக்கும் உரிமை சிறுவருக்கு உண்டு.

(ஈ) சுதந்திரம் மறுக்கப்பட்ட ஒவ்வொரு சிறுவரும் உடனடியாகவே சட்ட மற்றும் பொருத்தமான உதவியை நாடுவதற்கு மட்டுமன்றி நீதிமன்றம், அல்லது ஏனைய தகுதிவாய்ந்த, சுதந்திரமான, பக்கச் சார்பற்ற அதிகாரசபை முன் தனது சுதந்திரம் பறிக்கப்பட்டமை பற்றி நியாயம் கோருதற்கும் அவ்வாறான வழக்கில் துரிதமாகத் தீர்ப்புப் பெறுதற்கும் உரிமையுடையவராவார்.

## உறுப்புரை 38

1. ஆயுதப் பிணக்குகள் தொடர்பான சர்வதேச மனிதாபிமானச் சட்ட விதிகளில் சிறுவருக்குப் பொருந்தக்கூடிய விதிகளை மதிக்கவும், மதிக்கப் படுவதை உறுதிப்படுத்தவும் அரசதரப்பினர் பொறுப்பேற்றல் வேண்டும்.
2. பதினைந்து வயதை எட்டாதவர்கள் (பல நாடுகளில் இவ்வயதெல்லை 18 ஆகும்) சண்டைகளில் நேரடியாகப் பங்கு கொள்ளாதிருப்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கை அனைத்தையும் அரசதரப்பினர் மேற்கொள்ளல் வேண்டும்.
3. 15 வயதை அடையாத எவரையும் தமது படைகளிற் சேர்த்துக் கொள்வதை அரசதரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். படைக்கு ஆள்திரட்டும் போது, பதினைந்து வயதை அடைந்தும், பதினெட்டு வயதை அடையாதிருப்போர் மத்தியிலே வயது கூடியவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க முயலுதல் வேண்டும்.
4. ஆயுதப் போராட்டங்களின் போது, குடிமக்களைப் பாதுகாத்தல் வேண்டுமென்னும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கடப்பாடுகளுக்கு அமைய, ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைக் காத்துப் பராமரிப்பதற்கு ஏற்ற நடவடிக்கை அனைத்தையும் அரசதரப்பினர் மேற்கொள்ள வேண்டும்.

## உறுப்புரை 39

எந்த வகையான புறக்கணிப்பு, சுரண்டல் அல்லது இம்சை, சித்திரவதை, அல்லது குரூரமான, மிருகத்தனமான கண்டிப்பு, அல்லது தண்டனை, அல்லது ஆயுதப் பிணக்குகள் எவற்றினாலேனும் பாதிக்கப்பட்ட சிறுவர், உடலாலும், உள்ளத்தாலும் குணமடைந்து சமுதாயத்தில் மீளவும் இணைந்து கொள்ளச் செய்வதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் அரசதரப்பினர் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான குணமடைதலும், மீளச் சேர்தலும் சிறுவரின் ஆரோக்கியம், சுயகௌரவம், கண்ணியம் ஆகியவற்றைப் பேணுகின்ற சூழலில் அமைதல் வேண்டும்.

## உறுப்புரை 40

1. தண்டனைச் சட்டத்தை மீறிய பழிக்காளான ஒவ்வொரு சிறுவரும் அவர் கண்ணியத்தையும், மதிப்பையும் மேம்படுத்து வதற்கு உகந்த முறையிலே மனித உரிமைகளுக்கும், பிறரின் அடிப்படைச் சுதந்திரங்களுக்கும் பிள்ளை கொடுக்கும் மதிப்பை வலுப்படுத்தக்கூடியதாக, சிறுவரின் வயது, சமுதாயத்தில் அவர் மீண்டும் இணைவதன் ஏற்புடைமையை மற்றும் சமுதாயத்தில் அவர் ஆக்கபூர்வமாக ஆற்றக்கூடிய பணி ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு நடத்தப்படல் வேண்டும்.
2. இதன் பொருட்டும், சர்வதேச சாசனங்களின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டும் அரசதரப்பினர் பின்வருவனவற்றைக் குறிப்பாக உறுதிப்படுத்துதல் வேண்டும்:

    (அ) எந்தச் செயலும் அது புரியப்பட்ட வேளையில், தேசிய அல்லது சர்வதேச சட்டத்தின் படி தடுக்கப்படாதிருந்தால் அச்செயலைப் புரிந்த அல்லது புரியாதுவிட்ட காரணத்தினால் தண்டனைச் சட்டத்தை மீறியதாக எந்தப் சிறுவர் மீதும் பழி சுமத்தக்கூடாது.

    (ஆ) தண்டனைச் சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொரு சிறுவருக்கும் பின்வரும் குறைந்தபட்ச உத்தரவாதங்களாவது உள்ளன:

    (i) குற்றம் சட்டப்படி நிரூபிக்கப்படும் வரை சுற்றவாளியாகக் கருதப்படல் வேண்டும்.

    (ii) குற்றச்சாட்டுகள் எவை என உடனடியாகவும், நேரடியாகவும் அறிவிக்கப்படல் வேண்டும். மேலும், பொருத்தமாயின் பெற்றோர், அல்லது சட்டப்படியான பாதுகாவலருக்கு அறிவிக்க வேண்டும். அத்துடன் சிறுவர் சார்பான வாதத்தைத் தயாரித்துச் சமர்ப்பிக்கத் தேவையான சட்டவாரியான, அல்லது பிற பொருத்தமான உதவி கிடைக்கவும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

    (iii) சிறுவரின் வயது, அல்லது நிலைமை, பெற்றோர், அல்லது சட்டப்படியான பாதுகாவலர் ஆகியோரை விசேடமாகக் கவனத்திற் கொண்டு, சிறுவரின் நன்மைக்கு ஏற்றதல்ல எனக் கருதும் பட்சத்திலன்றி, மற்றும்படி, சட்டப்படியான, அல்லது வேறு பொருத்தமான உதவியாளரின் முன்னிலையில் தகுதிவாய்ந்த, சுதந்திரமான, பாரபட்ச மற்ற அதிகார சபையோ, நீதிபரிபாலனக் குழுவோ சட்டப்பிரகாரம் தீர விசாரித்து தாமதமின்றித் தீர்ப்பளித்தல் வேண்டும்.

    (iv) சாட்சியம் அளிக்கவோ, குற்றத்தை ஒப்புக் கொள்ளவோ நிர்ப்பந்திப்படலாகாது. சமத்துவமான நிலைமைகளில் பாதகமான சாட்சியங்களை விசாரணை செய்யவும், அல்லது விசாரணை செய்விக்கவும், சாதகமான சாட்சியங்கள் பங்கு கொள்ளவும், விசாரணைக்கு உட்படுத்தப் படவும் இடமளிக்கப்படல் வேண்டும்.

(v) தண்டனைச் சட்டத்தை மீறியதாகக் கருதும் பட்சத்தில் அந்த முடிவையும் அதன் விளைவாக விதிக்கப்படும் தண்டனையையும் சட்டப்படி தகுதிவாய்ந்த, சுதந்திரமான, பாரபட்சமற்ற அதிகாரசபை, அல்லது நீதித்துறைக் குழுவின் மீளாய்வுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) விசாரணையில் உபயோகிக்கப்படும் மொழியை சிறுவர் விளங்கிக் கொள்ளவோ, பேசவோ இயலாதிருக்கும் பட்சத்தில், மொழிபெயர்ப்பாளரின் உதவியை இலவசமாகக் கொடுத்து உதவ வேண்டும்.

(vii) விசாரணையின் சகல கட்டங்களிலும் சிறுவரின் அந்தரங்கம் பூரணமாகப் பேணப்படல் வேண்டும்.

3. தண்டனைச் சட்டத்தை மீறிய பழிக்குள்ளாகும் சிறுவர்களுக்கு விசேடமாகப் பொருந்தக் கூடியவாறான சட்டங்கள், நடைமுறைகள், அதிகாரசபைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் தாபிதத்தை ஊக்குவிப்பதற்கு அரசதரப்பினர் முயலுதல் வேண்டும். அத்துடன்,

(அ) இன்ன வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் தண்டனைச் சட்டத்தை மீறும் ஆற்றல் அற்றவர்கள் எனக் கருதக்கூடியவாறாக, குறைந்த பட்ச வயதெல்லை ஒன்றினை நிர்ணயிக்கவும்,

(ஆ) இத்தகைய சிறுவர், சிறுமியர் விடயத்தில், மனித உரிமைகளும், சட்டப் பாதுகாப்புகளும் முழுமையாகக் கௌரவிக்கப்படும் பட்சத்தில் நீதித்துறை நடைமுறைகளை விடுத்து பொருத்தமான வேறு நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவும் முயலுதல் வேண்டும்.

4. சிறுவர், சிறுமியரின் சேமநலனுக்கு இசைவாகவும், சூழ்நிலை, குற்றம் ஆகியவற்றின் தாற்பரியத்துக்கு ஏற்றவாறும் அவர்கள் நடத்தப்படுவதை நிச்சயம் செய்யும் பொருட்டு, தாபன வாரியான பராமரிப்பு நிலையங்களுக்குப் பதிலாக, பல்வேறு வகைப்பட்ட கவனிப்பு, வழிகாட்டல், கண்காணிப்பு, உத்தரவுகள், ஆலோசனைகள் வழங்கல், சுவீகாரப் பராமரிப்பு, கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள் போன்ற வசதிகள் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

## உறுப்புரை 41

இந்தச் சமவாயத்திலுள்ள எதுவும்,

(அ) அரசதரப்பினர் சட்டத்திலோ,

(ஆ) அந்த நாட்டில் நடைமுறையிலுள்ள சர்வதேச சட்டத்திலோ அடங்கியிருக்கக்கூடியனவும், பிள்ளையின் உரிமைகளை நிலைநாட்டுதற்கு அதிக வாய்ப்பானவுமாகிய எந்த ஏற்பாடுகளையும் பாதித்தலாகாது.

# பாகம் II

## உறுப்புரை 42

1. சமவாயத்தின் கோட்பாடுகளையும், ஏற்பாடு களையும் வயதுவந்தவர்களுக்கும், சிறுவர்களுக்கும் ஒருங்கே பரப்புவதற்குத் தகுந்த மார்க்கங்களை அரசதரப்பினர் மேற்கொள்ள வேண்டும்.

## உறுப்புரை 43

1. இந்தச் சமவாயத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் காணப்படும் முன்னேற்றத்தை ஆராயும் பொருட்டு, சிறுவர் உரிமைகள் மீதான செயற்குழு ஒன்றினை அரசதரப்பினர் அமைத்தல் வேண்டும்:

2. மேற்படி செயற்குழுவில் இந்தச் சமவாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் விடயங்களில் திறமை வாய்ந்தவர்களென அங்கீகரிக்கப்பட்டவர்களும் ஒழுக்கசாலிகளுமாகிய 10 நிபுணர்கள் இடம்பெறல் வேண்டும். செயற்குழுவினர் உறுப்பினர்களை அரசதரப்பினர் தமது சொந்தக் குடிமக்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள் உத்தியோகப் பற்றற்ற தனிப்பட்ட முறையில் செயற்பட வேண்டும். தெரிவுசெய்யும் விடயத்தில் பூகோளவாரியான பகிர்வும் பிரதானமான சட்ட அமைப்புகளும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

3. செயற்குழு உறுப்பினர்கள், அரசாங்கங்களால் தேர்வு செய்யப்பட்ட ஒரு குழுவிலிருந்து, இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். அரசதரப்பு ஒவ்வொன்றும் தனது சொந்த நாட்டவர்களில் ஒருவரை நியமிக்கலாம்.

4. செயற்குழுவுக்கான முதலாவது தேர்தல், தற்போதைய சமவாயம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாமலும், அதன் பின்னர் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும் நடத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு தேர்தலுக்கும் குறைந்த பட்சம் நான்கு மாதங்களுக்கு முன்னர், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அரசதரப்பினருக்குக் கடிதமொன்றினை அனுப்பி இரண்டு மாதங்களுக்குள் தமது தேர்வு நியமனங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்க வேண்டும். இதன் பின்னர், செயலாளர் நாயகம் நியமனம் பெற்றவர்களின் பட்டியலொன்றை அகரவரிசைப்படி தயாரித்து, அவர்களை நியமித்த அரசதரப்பினரையும் குறிப்பிட்டு, தற்போதைய சமவாயத்தின் அரசதரப்பினருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. தேர்தல்கள் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் செயலாளர் நாயகம் ஏற்பாடு செய்யும் அரசதரப்புகளின் கூட்டத்தில் நடத்தப்படல் வேண்டும். இக்கூட்டங்களில் அரசதரப்புகளின் மூன்றில் இரண்டு பங்கினர் கூட்ட நடப்பெண் உறுப்பினர்களாகச் சமூகமளித்திருத்தல் வேண்டும். செயற்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் மிகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றவர்களாகவும், வாக்களிப்பில் நேரடியாகப் பங்குகொண்ட பிரதிநிதிகளின் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

6. செயற்குழு உறுப்பினர்கள் நான்கு வருட காலத்துக்குத் தெரிவு செய்யப்படுவர். மீளவும் நியமனம் பெற்றால் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதிபெறுவர். முதலாவது தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து உறுப்பினர்களின் பதவிக்காலம் ஈராண்டில் முடிவடையும். முதலாவது தேர்தல் முடிந்த உடனேயே கூட்டத்தின் தலைவர் இந்த ஐந்து உறுப்பினர்களின் பெயர்களை திருவுளச் சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்வார்.

7. செயற்குழு உறுப்பினர் ஒருவர் இறந்தால், அல்லது பதவி துறந்தால் அல்லது வேறு எக்காரணத்தை முன்னிட்டும் தன் நாட்டைச் சேர்ந்த மற்றொரு நிபுணரை எஞ்சியுள்ள காலத்துக்குப் பணியாற்றும்படி அரசதரப்பு நியமிக்கலாம். ஆனால், அதற்கு செயற்குழுவின் அங்கீகாரம் தேவை.

8. செயற்குழு தனது நடைமுறை விதிகளைத் தானே அமைத்துக் கொள்ளும்.

9. செயற்குழு ஈராண்டு காலத்துக்குத் தனது உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுக்கும்.

10. செயற்குழுவின் கூட்டங்கள் வழக்கமாக ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில், அல்லது செயற்குழு வசதியானதெனக் கருதும் வேறோர் இடத்தில் நடைபெறும். செயற்குழு வழக்கமாக ஆண்டுக்கு ஒரு முறை கூட வேண்டும். கூட்டத்தின் காலவரையறை, அவசியமாயின், பொதுச் சபையின் அங்கீகாரம் இருக்கும் பட்சத்தில், தற்போதைய சமவாயத்தின் அரசதரப்பினர் கூட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டு, மீளாய்வு செய்யப்படலாம்.

11. தற்போதைய சமவாயத்தின் பணிகள் சிறப்பான முறையில் நிறைவேற்றப்படுவதற்கு அவசியமான ஊழியர்களையும், வசதிகளையும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொடுத்துதவ வேண்டும்.

12. தற்போதைய சமவாயத்துக்கு அமைய நியமனம் பெற்ற செயற்குழு உறுப்பினர்கள் பொதுச் சபையின் அங்கீகாரத்துடன், அச்சபை தீர்மானித்த விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டவாறான வரும்படிகளை ஐக்கிய நாடுகளின் நிதிமூலங்களிலிருந்து பெறுவர்.

## உறுப்புரை 44

1. இத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகளைச் செயற்படுத்துவதற்குத் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள், மற்றும் அந்த உரிமைகளை ஆண்டனுபவிப்பதில் ஏற்பட்ட முன்னேற்றம் ஆகியன தொடர்பான அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் மூலமாக செயற்குழுவுக்குச் சமர்ப்பிக்க அரசதரப்பினர் பொறுப்பேற்க வேண்டும். இது:

   (அ) சம்பந்தப்பட்ட அரசதரப்பு சமவாயத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்த ஈராண்டுக் குள்ளும்

   (ஆ) அதன் பின்னர் ஐந்தாண்டுக்கொரு முறையும் நடைபெற வேண்டும்.

2. இந்தச் சமவாயத்தின் கடப்பாடுகள் நிறைவேற்றப்படும் அளவைப் பாதிக்கும் காரணிகளும் சிரமங்களும் இருந்தால், தற்போதைய உறுப்புரையின் படி தயாரிக்கப்படும் அறிக்கைகள் அவற்றைச் சுட்டிக் காட்டுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட நாட்டில் சமவாயம் செயற்படுத்தப்படும் விதம் பற்றிய விரிவான விளக்கத்தை செயற்குழுவுக்கு வழங்குவதற்குப் போதுமான தகவல்களையும் அவ்வறிக்கைகள் கொண்டிருத்தல் வேண்டும்.

3. விரிவான ஆரம்ப அறிக்கையினைச் செயற்குழுவுக்குச் சமர்ப்பித்த ஓர் அரசதரப்பு தற்போதைய உறுப்புரையின் 1(அ) பந்தியின் பிரகாரம் பின்னர் சமர்ப்பிக்கும் அறிக்கைகளில் ஏற்கனவே தெரிவித்த அடிப்படைத் தகவல்களை மீண்டும் கொடுக்க வேண்டியதில்லை.

4. செயற்குழு சமவாயம் அமுலாக்கப்படுதல் தொடர்பான மேலும் தகவல்களை வழங்குமாறு அரசதரப்பினரைக் கேட்கலாம்.

5. செயற்குழு பொருளாதார, சமூக, சபையின் மூலம் பொதுச் சபைக்கு, தனது நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகளை ஈராண்டுக்கொருமுறை சமர்ப்பித்தல் வேண்டும்.

6. அரசதரப்பினர் தமது அறிக்கைகள் தமது நாட்டு மக்களுக்குப் பரவலாகக் கிடைக்க வேண்டிய வழிவகைகளை செய்தல் வேண்டும்.

## உறுப்புரை 45

சமவாயம் சிறப்பாகச் செயற்படுவதை வளர்ப்பதற்கும் சமவாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும்,

(அ) சிறப்பு முகவர் நிலையங்கள், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் மற்றும் ஐக்கிய நாடுகளின் ஏனைய அமைப்புகள் என்பன, தத்தமது அதிகார எல்லைக்குள் அமைகின்ற உறுப்புரைகள் தொடர்பான செயற்பாடுகள் ஆராயப்படும் போது தமது பிரதிநிதிகளைப் பங்கு கொள்ளச் செய்யும் உரித்துடையனவாய் இருத்தல் வேண்டும். செயற்குழுவானது சமவாயத்தின் செயற்பாட்டில் சிறப்பு முகவர் நிலையங்கள், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், ஏனைய தகுதிவாய்ந்த அமைப்புகள் ஆகியவற்றை, அந்தந்த அமைப்பின் எல்லைக்குட்பட்ட விடயங்கள் தொடர்பாக நிபுணத்துவ ஆலோசனை வழங்குமாறு அழைக்கலாம். சமவாயத்தின் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படியும் செயற்குழு மேற்படி அமைப்புகளை அழைக்கலாம்.

(ஆ) அரசதரப்பினர் சமர்ப்பிக்கும் அறிக்கைகளில் தொழில்நுட்ப ஆலோசனை அல்லது உதவி தொடர்பான விண்ணப்பம் காணப்பட்டால் அல்லது தேவை சுட்டிக்காட்டப்பட்டிருந்தால், செயற்குழு, அவ்வாறான தேவை, அல்லது விண்ணப்பத்தை அவை பற்றித் தனக்கு ஏதும் கருத்து, அல்லது யோசனை இருப்பின், அதனோடு பொருத்தமானதெனக் கருதும் சிறப்பு முகவர் நிலையங்கள், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் மற்றும் தகுதிவாய்ந்த அமைப்புகள் ஆகியவற்றுக்கு அனுப்புதல் வேண்டும்.

(இ) செயற்குழு சிறுவர் உரிமைகள் தொடர்பான குறிப்பிட்ட பிரச்சினைகளையிட்டு, தன் சார்பாக ஆய்வுகளை

மேற்கொள்ளும்படி செயலாளர் நாயகத்தை வேண்டுமாறு பொதுச் சபைக்குச் சிபார்சு செய்யலாம்.

(ஈ) செயற்குழு தற்போதைய சமவாயத்தின் 44, 45ஆம் உறுப்புரைகளுக்கு அமையப் பெற்றுக் கொண்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டு யோசனைகள், பொதுவான விதந்துரைகள் ஆகியவற்றைத் தெரிவிக்கலாம். இவ்வாறான யோசனைகளும், விதந்துரைகளும் சம்பந்தப்பட்ட அரசதரப்பினருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அத்துடன், அரசதரப்பினர் குறிப்புரைகள் ஏதும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவற்றையும் சேர்த்துப் பொதுச் சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

## பாகம் III

### உறுப்புரை 46

தற்போதைய சமவாயம் எல்லா நாடுகளும் ஒப்பமிடப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

### உறுப்புரை 47

தற்போதைய சமவாயம் ஒப்புதலைப் பெற இருக்கிறது. ஒப்புதல் தொடர்பான சாசனங்கள் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

### உறுப்புரை 48

தற்போதைய சமவாயம், எந்த நாடும் சேர்ந்து கொள்ள இடமளிப்பதாய் இருத்தல் வேண்டும். அதற்குரிய சாசனங்கள் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

### உறுப்புரை 49

1. தற்போதைய சமவாயமானது ஒப்புதல், அல்லது சேருதல் தொடர்பான இருபதாவது சாசனம், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பதாவது நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.
2. இந்த விதி, ஒப்புதல், அல்லது சேருதல் தொடர்பான சாசனத்தை ஒப்படைக்கும் ஒவ்வொரு நாட்டுக்கும் பொருந்துவதாகும்.

### உறுப்புரை 50

1. எந்த அரசதரப்பும் திருத்தமொன்றைப் பிரேரித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் கோவையிலிடச் செய்யலாம். செயலாளர் நாயகம் அந்தத் திருத்தத்தைப் பங்காளி நாடுகளுக்கு அறிவித்து, அதனை ஆராய்ந்து வாக்கெடுப்பதற்கான ஒரு மாநாட்டைக் கூட்ட வேண்டுமா என அறிவிக்கும்படி கோரலாம். இந்த அறிவித்தல் விடுத்த நான்கு மாதத்துள் அரசதரப்பினரில் மூன்றில் ஒரு பங்கினராவது அத்தகைய மாநாட்டுக்குச் சார்பாகப் பதில் அளிக்கும்பட்சத்தில், செயலாளர் நாயகம் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவில் மாநாட்டைக் கூட்ட வேண்டும். மாநாட்டில் நடைபெறும் வாக்கெடுப்பில் பெரும்பான்மையான அரசதரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்படும் திருத்தப் பிரேரணை பொதுச் சபையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. மேற்படி திருத்தம் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகரிக்கப்பட்டு, அரசதரப்பினரால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் நடைமுறைக்கு வரல் வேண்டும்.
3. ஒரு திருத்தம் நடைமுறைக்கு வந்தால், அதனை ஏற்றுக்கொண்ட அரசதரப்பினர் அதற்குக் கட்டுப்படல் வேண்டும். ஏனைய அரசதரப்பினர் தற்போதைய சமவாயத்தின் உறுப்புரைகளுக்கும், தாம் ஏற்றுக் கொண்ட முன்னைய திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டவராக இருப்பர்.

### உறுப்புரை 51

1. ஒப்புதல், அல்லது சேருதல் நடவடிக்கையின் போது நாடுகள் தெரிவிக்கும் ஆட்சேபனைகளின் வாசகத்தை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் ஏற்று எல்லா நாடுகளுக்கும் அறிவித்தல் வேண்டும்.
2. தற்போதைய சமவாயத்தின் இலட்சியத் துக்கும், நோக்கத்துக்கும் முரணான ஆட்சேபனை அனுமதிக்கப் படமாட்டாது.
3. ஆட்சேபனைகளை மீளப் பெறுவதானால் எச்சமயத்திலும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துக்கு அறிவித்தல் கொடுத்து மீளப் பெற்றுக் கொள்ளலாம். அவர் எல்லா நாடுகளுக்கும் இதுபற்றி அறிவிப்பார். அத்தகைய அறிவித்தல் செயலாளர் நாயகம் அதனைப் பெற்ற திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

### உறுப்புரை 52

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திற்கான எழுத்துமூல அறிவித்தல் மூலம் தற்போதைய சமவாயத்தை ஏதாவது அரசதரப்பினர் ஆட்சேபிக்கமுடியும். செயலாளர் நாயகத்திற்கு அறிவித்தல் கிடைத்த திகதியின் ஒரு வருடத்தின் பின்னர் ஆட்சேபனை செயற்பட ஆரம்பிக்கும்.

### உறுப்புரை 53

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் தற்போதைய சமவாயத்தின் காப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### உறுப்புரை 54

தற்போதைய சமவாயத்தின் மூலச்சுவடி ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். இதன் அரபி, சீன, பிரெஞ்சு, ருஷ்ய, ஸ்பானிய மொழிபெயர்ப்புகளும் மூலப்பிரதி போலவே செல்லுபடியாகும் தகுதி கொண்டவை.

இதற்குச் சாட்சியாக அந்தந்த அரசுகளினால் முறையாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிகள் தற்போதைய சமவாயத்தில் ஒப்பமிட்டுள்ளார்கள்.

# பெண்ணின் குரல்

டிசம்பர் 2001 ❑ இதழ் 24 ❑ ISSN 1391-0914 ❑ விலை ரூபா 20/=


## படரவிட்டேன்

என்னைப் பெற்றெடுத்த முத்தமிழே
பிள்ளையுனைப் பாடுகின்றேன்
பூட்டி வைத்த செவியிரண்டை
நீக்கி விட்டுக்கேள் தாயே
ஊருகின்ற ரத்தத்தில்
சேருகின்ற மிச்சத்தில்
தவழுகின்ற காலத்தில்
பாலாக்கி எனக்களித்தாய்
மாறுகின்ற காலங்கள்
மலருகின்ற வருடங்கள்
மாறி மாறி வந்தாலும்
நானுந்தன் மகளாக
பிறக்க வேண்டும் தாயே
ஆவி துறந்தாலும்
அம்மாவென்றழைக்காமல்
போகின்ற உயிரெந்தன்
சுவர்க்கம் சேராதம்மா
பாலூக்கீடாகுமா?
பாடுகின்ற எந்தன் கவி
தேனீக்கள் மொய்க்காமல்
மேனிக்குள் வைத்திருந்து
அன்னைக்காய் படரவிட்டேன்
அரும்பான என் கற்பனையை

வி.உதயவாணி